திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி :12

டிசம்பர் - 08

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

## வாசகர் வாசகம்

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு, வணக்கம். தொகுதி 102, பகுதி–9, செந்தமிழ் இதழில் எனது 'ஞானி புகழ்ந்த மானி' என்றகவிதையை வெளியிட்டமைக்குப் பெரிதும் நன்றியுடையேன்.

பைந்தமிழ்ப் பாண்டித்துரைத்தேவரின் அளப்பரிய கொடைக்கு அபிதான சிந்தாமணி நூல் ஒரு சான்று. அதைக் கொணர்ந்ததோடு அந்நூலாசிரியரை வாழவைத்த சிறப்பைக் கட்டுரையாக்கி அனுப்பியுள்ளேன்.

'செந்தமிழ் இதழ்' பழம் புகழ் பேணியும் புதுப்புகழ் வளர்த்தும் வருவது கண்டு தமிழுலகம் இறும்பூதெய்துகின்றது.

நன்றி!

**தெ. முருகசாமி**
புதுச்சேரி

<u>நவமணிமாலை சூடிய செந்தமிழ்</u>

மாண்புமிகு நல்முதல்வர் நற்கலைஞர்
மாமணியின் நேர்உரைத்த 'கருத்துரைகள்',
பூண்அணிபோல் அழகுமலை 'இதழ்மணப்பூ',
பொன்நேராம் செல்வத்தின் 'கல்வெட்டு',
'வாய்மை', 'செம் மொழி','சிற்பம்', 'சித்திரப்பா',
வளந்தமிழ் 'பா வேந்தநேயம்', 'குறள்வியப்பே',
ஆய்ந்தெடுத்த மணிநவத்தின் சூட்டல்போல்,
பொன்.பாண்டி செந்தமிழ்க்குச் சேர்நலமே!

அன்புடன்,

புலவர் **சி. பாண்டுரங்கன்** எம்.ஏ.,பி.எட்.,

ஆம்பூர்

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 102
பகுதி : 12
*டிசம்பர்* 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2039**




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


இதழ்மணம் 3

பாரதிதாசன் பாடல்களில் மானுட நேயம் 4

(சென்ற இதழ்த் தொடர்ச்சி) டாக்டர் மா.இராமச்சந்திரன்

மொழி மீட்புப் போராளி உ.சண்முகநாதன் 21

உள்ளி உவந்து ஈந்த வள்ளல் 27

தமிழாசிரியர் தெ.முருகசாமி

தமிழ் : செம்மொழிச் செயலாக்கத்திற்குச் செய்ய வேண்டுவன 30

தி. இராசகோபாலன்,

# இதழ்மணம்

மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆற்றிவரும் தமிழ்ப்பணியைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும். அவ்வகையில் தமிழ், தமிழ்மொழி, தமிழினம் என்கின்ற சிந்தனை விதைகளைத் தூவுகின்ற பணியைத் தொடர்ந்து விளக்கிட திசம்பர் மாத இதழ் வெளிவருகிறது.

பாவேந்தர் பாரதிதாசனின் சமூக உணர்வுகளின் வெளிப்பாடு, மனிதத்தின் விழுமியங்கள், உலகநோக்கு, பொதுவுடைமை, பண்டைத்தமிழரின் மரபைப் போற்றும் நிலை, மூட நம்பிக்கைகளைத் தகர்த்து எறியும் நிலைப்பாடு போன்றவற்றை பாரதிதாசனாரின் பாடல்வரிகளுடன் எடுத்துரைப்பதாக டாக்டர்.மா.இராமச்சந்திரன் அவர்களின் "பாரதிதாசன் பாடல்களில் மானுடநேயம்" என்னும் கட்டுரை அமைந்துள்ளது.

பாவாணரின் தாய்மொழிச் சிந்தனையையும், மொழி அறிவையும் பல்துறை ஆராய்ச்சி அறிவும், சமூகச் சிந்தனைகளின் வெளிப்பாட்டையும், தாய்மொழியை மீட்டெடுக்கும் அறிவார்ந்த புரட்சியையும், நுண்மாண் நுழைபுலத்தையும் விளக்குவதாக உ.சண்முகநாதன் அவர்களின் "மொழி மீட்புப் போராளி" எனும் கட்டுரை வெளிக்காட்டி நிற்கிறது.

"தமிழ் நெஞ்சர்" வள்ளல் பொன்.பாண்டித்துரைச் சாமித் தேவரின் வள்ளல் தன்மை அதியமானின் கொடைத் தன்மையை ஒத்து விளங்குகிறது என்றும், தமிழ்ப்பரப்பும் பணியே தலையாயப் பணியாக எண்ணியவர் தேவர் அவர்கள் என்றும் தேவரின் வள்ளல் தன்மையை கம்பனின் வரிகொண்டு வாழ்த்திப் போற்றி விளக்கி நிற்பதை தமிழாசிரியர் தெ.முருகசாமி அவர்களின் "உள்ளி உவந்து ஈந்த வள்ளல்" எனும் கட்டுரை பகர்கிறது.

உலக மொழிகளில் தொன்மையான மொழியாக விளங்கியது தமிழ்மொழி. செவ்வியல் தன்மையைக் கெண்டு விளங்குவது வேறு மொழிகளுக்கு மூலமொழியாகவும் விளங்கி நிலைத்து நிற்கும் மொழி தமிழ். இத்தகைய தொன்மை வாய்ந்திட்ட செம்மொழியாகியத் தமிழை உலகெங்கும் பல்வேறு துறைகளில் கொண்டு செல்ல நாம் செய்ய வேண்டியவை எவை எவை என்பதை தி.இராசகோபாலன் அவர்களின் "தமிழ் செம்மொழிச் செயலாக்கத்திற்குச் செய்ய வேண்டுவன" எனும் கட்டுரை விளக்கித் தொடர்கிறது.

தரணியில் தமிழ்ப் பரப்பும் நோக்கில் தொடர்ந்து செந்தமிழ் இதழ் உங்கள் கையில் தவழ்கிறது.

– க. சின்னப்பா

# பாரதிதாசன் பாடல்களில் மானுடநேயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

டாக்டர் மா. இராமச்சந்திரன்

## 3. சமூகநிலையில் மானுட நேயம்

மக்கள் இணைந்து வாழும்நிலை சமுதாயம் எனப்பெறும். நாளடைவில் மக்களின் எண்ணங்களிலும் செயல்களிலும் மாற்றங்கள் உண்டாகின்றன. இதன் காரணமாக சமுதாயத்தில் புதிய தேவைகளும் பிரச்சனைகளும் தோன்றுகின்றன. சில பழக்க வழக்கம் தேவையாகலாம். சில பழக்க வழக்கங்கள் தேவையற்றதாகலாம். இதனால் பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பாகிறது. இப்படிப்பட்ட நேரங்களில் சில முரண்பாடுகள் தோன்றலாம். இம்முரண்பாடுகளை அறிந்து காலத்தின் தேவையைச் சொல்லிச் சமுதாயத்தை வழிநடத்தக் கூடிய வழிகாட்டிகள் அப்போது உருவாகின்றனர். இது காலத்தின் கட்டாய விளைவு ஆகும். தான் பிறந்த சமுதாயத்தின் நிலையை உயர்த்த பாடுபடும் மனிதன் புகழ்பெற்றவனாகிறான். அவன் தன் உடலாலும் உள்ளத்தாலும் சமுதாயத்தை உயர்த்த உழைக்கிறான். தான் பிறக்கும்போது இருந்ததை விட ஒருபடி அளவாவது சமுதாயத்தின் நிலையை உயர்த்தி விட்டுத்தான் மடிகிறான். இத்தகு பண்பாளர்களால் தான் உலகம் நிலை பெறுகிறது. சமுதாயம் வாழ்கிறது.

தமிழ்ச் சமுதாயம் மாற்றம் பெற, வளர்ச்சி பெற உழைத்த பெரியோர்களின் வரிசையிலே பாரதிதாசனும் இடம் பெறுகிறார். தன்னுடைய சமகாலத்துச் சமூக உணர்வினைக் கவியாக்கிப் பெருமை பெறுகின்றார். பாரதிதாசன் மனித நேயத்தோடு சமுதாயத்தைப் பார்த்துச் சமுதாயத்தின் தேவைகளைப் பாடுகிறார். சமகால, எதிர்காலச் சமுதாயத்திற்கு வேண்டிய ஆக்கத் தேவைகளையும் அழிவுத்தேவைகளையும் அவர் உணர்ந்து கூறுகிறார்.

பாரதிதாசன் சமுதாய வளர்ச்சிக்காக மனித நேயத்தோடு கூறிய கருத்துக்களை மூடநம்பிக்கைகள், சமத்துவநிலை, பெண்ணுரிமை, பொதுநலத் தொண்டு, குடும்பமேம்பாடு என்று வகைப்படுத்தலாம்.

"கழைக் கூத்தியின் காதல்" என்ற நாடகத்தில் உதவிப் படைத்தலைவர் பொழுதுவிடிந்தால் திங்கட்கிழமை என்றும் இராகு *காலம் கடந்தபின் போர் தொடங்குவது என்றும் திட்டம் தீட்டுகின்றார்.* நடக்கப்போகும் போரிலே வெற்றியா? தோல்வியா? என்பதை அறிய பிள்ளையார் பிடித்து வைத்துப் பூவைத்துப் பார்க்கிறார். தன் தோள் வலிமையையும் படைவலிமையையும் நம்ப வேண்டியவன் படைத்தலைவன். அவன் நல்ல நேரத்தையும் பிள்ளையாரின் பதிலையும் எதிர்ப்பார்த்திருப்பது மூடநம்பிக்கையின் உச்சநிலை என்று பாரதிதாசன் எள்ளல் செய்கின்றார்.

கூடப்பிறந்த பெண்ணைக் கைம்மை நிலை காட்டித்தள்ளி வைக்கும் மூடப்பழக்கத்தையும் பாரதிதாசன் சாடுகிறார். கணவனை இழந்த பெண் பூ, பொட்டு இவைகளை இழக்கவேண்டும். அவள் *எதிரில் வந்தால் அபசகுணம். தரையில் படுக்கவேண்டும்*, குறைவாக சாப்பிட வேண்டும். இவ்வாறு இச்சமூகம் விதித்த மூடக்கட்டுப்பாட்டைப் பாரதிதாசன் வெறுக்கின்றார்.

*"செம்பொற் சிலைஇக் காலே*
*கைம் பெண்ணாய்ப் போனதாலே*
*திலகமோ குழலில் – மலர்களோ அணியின்*
*உலகமே வசைகள் – பலவுமே புகலும்"*

*(பா.க., ப.100)*

என்று நடைமுறை நிலையை எடுத்துரைக்கின்றார். அவளுக்கு இழைத்த கொடுமையை,

*"தரையிற் படுத்தல் வேண்டும்*
*சாதம் குறைத்தல் வேண்டும்*
*தாலியற்றவள் – மேலழுத்திடும்*
*வேலின் அக்ரமம் – ஞாலம் ஒப்புமோ? (பா.க., ப.101)*

என்று கூறி உளம் பொங்குகின்றார்.

நல்லமுத்துக்கதையில் வரும் மண்ணாங்கட்டியும் வெள்ளையப்பனும் கொக்குப் புரோகிதரிடம் சாதகம் பார்ப்பது மூடநம்பிக்கையைப் புடம் போட்டுக் காட்டுகின்றது. புரோகிதன் சாதகத்தைப் பார்த்துவிட்டு, "இது ஆண்மகன் சாதகம், இவனுக்கு

வயது 20" என்று சொல்கிறான். இதைக் கேட்டதும் "சரியாகச் சொன்னாய்" என்று புரோகிதர் மீது நம்பிக்கை வைக்கின்றனர். சாதாரண செய்தியைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் பாமரமக்கள் உள்ளனர் என்பதை இது காட்டுகின்றது. கடைசியில் புரோகிதர்

*"ஆடிக் கடைசியில் ஆகும் என்றால்*
*ஆவணி முதலில் என்றுதான் அர்த்தம்"* *(பா.க., ப.30)*

என்று கூறுவதாகக் காட்டிப் புரோகிதர் தன் வாய்ச்சாமர்த்தியத்தால் பிழைப்பதைக் காட்டுகிறார்.

இந்த நாடு நிலைதாழ்ந்து போவதற்கு மூடப்பழக்கம் தான் காரணம் என்றிருந்த பாவேந்தர் மூடப்பழக்கம் ஒழிந்தால்தான் நாடு முன்னேறும் என்று எண்ணுகின்றார்.

*"இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்*
*முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?*
*செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?*
*மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்*
*ஓடுவ தென்றோ! உயர்வ தென்றோ! நானறியேன்".*
(பா.க., ப.15)

என்று அதைப்பாடுகின்றார்.

மூடப்பழக்கம் ஒழிய அறியாமை அகல வேண்டும் என்று பாரதிதாசன் எண்ணுகிறார். அறியாமை அகல கல்வி கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றார். அதனால் தான்,

*"இன்பத் தமிழ்க் கல்வியாவரும் கற்றவர்*
*என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்*
*துன்பங்கள் நீங்கும். சுகம்வரும் நெஞ்சினில்*
*தூய்மை யுண்டாகிடும். வீரம் வரும்"* *(பா.க., ப.82)*

என்று பாடுகின்றார்.

### சமத்துவநிலை

பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டும் சமூகக் கொடுஞ்செயலைக் கண்டு பாரதிதாசன் உள்ளம் கொதிக்கின்றார். சாதியிலே பேதம் சொல்லிச் சண்டையிடும் வழக்கைமாற்ற எண்ணுகிறார். இதன் விளைவாக,

*"பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை -இந்தப்
பிழைநீங்குவதே உயிருள்ளோரின் கடமை" (பா.க., ப.132)*

என்று குரல் கொடுக்கின்றார்.

தீண்டத்தகாதவர் என்று தள்ளப்படுபவர் மீது நேசங்கொண்ட பாரதிதாசன் "அவர்களும் நம் உறவினர் தான், அவர்களை ஒதுக்குவது நியாயமா?" என்று வினவுகின்றார்.

*"சேரிப் பறையர் என்றும்
தீண்டாதார் என்றும் சொல்லும்
வீரர்நம் உற்றாரடி – சகியே
வீரர்நம் உற்றாரடி" (பா.க., ப.394)*

என்ற பாடல் மூலம் சமூகத்தில் மூடிய கண்ணைத் திறக்கப்பார்க்கிறார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆலய உரிமை மறுக்கப்பட்டதைக் கண்டு,

*"குக்கலும் காகமும் கோயிலிற் போவதிற்
கொஞ்சமும் திட்டிலையோ – நாட்டு
மக்களிலே சிலர்மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டிலையோ" (பா.க., ப.408)*

என்று உள்ளம் குமுறுகின்றார். தம்மோடு வாழும் மனித சாதியை விலங்கிலும், பறவையிலும் கீழாய் நினைக்கும் மனநிலை என்று மாறும் என்று கதறுகின்றார். இந்தத் தீண்டாமை என்னும் இழிநிலை வேறு எங்கும் இல்லை என்பதையும் அது இந்தியாவில் மட்டுமே உள்ளது என்பதையும்,

*"தீண்டாமை என்னுமொரு பேய் – இந்தத்
தேசத்தில் மாத்திரமே திரியக்கண்டோம்"*

என்று பாடுகின்றார்.

உயர்வு தாழ்வு என்னும் பேதம் நீங்க வேண்டும் என்று பாரதிதாசன் எண்ணுகின்றார். அதற்குப் பாதிக்கப்பட்டவர்களே தங்கள் பெருமை உணர்ந்து எதிர்ப்புக் கூறவேண்டும் என்கிறார்.

*"உயர்வென்று பார்ப்பனன் சொன்னால் – நீ*
*உலகினில் மக்கள் எல்லாம் சமம் என்பாய்*
*துயருறத் தாழ்ந்தவர் உள்ளார் – என்று*
*சொல்லிடுந் தியரைத் தூவென் றுமிழ்வாய்"*

*(பா.க., ப.116)*

என்று அவர்களுக்குத் தன்னம்பிக்கை கொடுக்கிறார்.

## பெண்ணுரிமை

பெருமை மிகுந்தவள் பெண். பேணத்தக்கவள் பெண். மதிப்பு மிகுந்த பெட்டகமாகப் போற்றப்பட்டவள் பெண். ஆனால் இப்பெண்களின் உரிமையைப் பறித்து அவர்களை அடிமையாக்கும் பழக்கம் இந்நாட்டில் இடையிலே தோன்றி வேரூன்றிவிட்டது. 'சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை', 'பெண் பிறந்த வீடு போல', 'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி' என்பன போன்ற பழமொழிகள் பெண்மையை இழிவுபடுத்தும் வகையிலே எழுந்தன. கல்வி உரிமை, திருமணம் போன்ற எல்லாவகைகளிலும் பெண்ணுக்கு ஓரவஞ்சனைக் காட்டப்பட்டது. மொத்தத்தில் அவள்,

*"கீழ்ச்சாதிக்குள் அவள் ஒரு கீழ்ச்சாதி இல்லாமைக்குள்*
*அவள் இன்னும் இல்லாதவள். மனிதத்தின் பகுதியாக*
*அவள் கருதப்படவில்லை"*

என்று கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். இந்த அவலநிலையை ஒழித்துப் பெண்ணைப் பெருமை மிக்கவளாக மாற்ற முனைந்தெழுந்தார் பாரதிதாசன். 'மாந்தர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்றார் பாரதியார். பெண்ணை வீரத்தாயாக்கிக் குள்ளநரிக் கூட்டத்தின் சதிச் செயலை முறியடிக்கச் செய்தார் பாரதிதாசன். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்பது போலப் பெண்ணுரிமையைப் பாடுவதில் பாரதிதாசன் பாரதியையும் மிஞ்சிவிடுகிறார் எனலாம். பெண்ணுரிமையைப் பல கோணங்களில் பார்த்தவர் பாரதிதாசன்.

## பெண்ணடிமை மடமை

பெண் என்பவள் ஆணைப் பெற்றுத்தந்தவள் மட்டுமல்ல. ஆண் பெறும் அத்தனை இன்பங்களுக்கும் காரணமானவள் என்பது பாரதிதாசன் எண்ணம். இதனை,

*பெண்கள் இட்ட பிச்சைதான் – ஆண்கள்*
*பெற்ற இன்பம் அனைத்தும்.* *(பா.க., ப.440)*

என்ற வரியின் மூலம் உணரலாம். பெர்னாட்ஷாவின் வாய்மொழியாலே பெண்ணின் சிறப்பைப் பேசுகின்றார் இப்படிப்பட்ட பெண்களின் உரிமை பறிக்கப்பட்டதைக் கண்டு,

*"பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்என் கின்றீரோ?*
*மண்ணுக்கும் கேடாய் மதித்திரோ பெண்ணினத்தை?*
*(பா.க., ப.3)*

என்று சீறியெழுகின்றார். பெண்ணை அடிமையாக்குவது ஆண் தன்னைத்தானே அடிமையாக்கிக் கொள்ளும் மடமை என்பதைப் புரிய வைக்கிறார். நாட்டிலுள்ள பெண்களை அடிமையாய் வைத்திருக்கும்வரை தாய்த்திருநாட்டிற்கு விடுதலை வராது என்று உறுதிபடக் கூறுகின்றார்.

*"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு*
*மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே*
*ஊமை என்று பெண்ணை உரைக்கும் மட்டும் உள்ளடங்கும்*
*ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு* *(பா.க., ப.3)*

என்ற பாடலில் பெண்ணை அடிமையாக வைத்திருக்கும் ஆணினத்தைச் சாட்டையடி கொடுக்கிறார்.

## பெண்கல்வி

'அடுப்பூதும் பெண்ணுக்குக் கல்வி எதற்கு'? 'பெண் படித்து என்னதான் செய்யப் போகிறாள்'? என்று பலகாரணங்களைச் சொல்லிப் பெண் கல்விக்குத் தடைவிதித்தனர். ஆனால் பெண்ணடிமை ஒழிவதற்கும் குடும்ப முன்னேற்றத்திற்கும் பெண் கல்வி இன்றியமையாதது என்பது பாரதிதாசனின் விருப்பம். பெண்ணுக்குக் கல்வி தேவையில்லை என்று சொல்பவர்களுக்குப் பதிலாக,

*பெண்கட்குக் கல்வி வேண்டும்*
*குடித்தனம் பேணு தற்கே!*
*பெண்கட்குக் கல்வி வேண்டும்*

*மக்களைப் பேணுதற்கே!*
*பெண்கட்குக் கல்வி வேண்டும்*
*உலகினைப் பேணு தற்கே!*
*பெண்கட்குக் கல்வி வேண்டும்*
*கல்வியைப் பேணுதற்கே!* *(கு.வி., ப.69)*

என்று பெண்கல்வியின் அவசியத்தைப் பாரதிதாசன் அடுக்கிக் கொண்டே போகிறார். பெண் கல்வி பெறவில்லை எனில் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் பயனில்லை என்பதை,

*கல்வியில் லாத பெண்கள்*
*களர்நிலம்! அந்நிலத்தில்*
*புல்விளைந் திடலாம், நல்ல*
*புதல்வர்கள் விளைதல் இல்லை!* *(கு.வி., ப.69)*

என்று விளக்குகிறார். "பண்படுத்தப்பட்ட மண்ணுக்கே நன்செய் என்று பெயர், படித்த பெண்ணுக்கே பெண் என்று பெயர்" என்று குடும்பவிளக்கும் குண்டுக்கல்லும் என்ற நாடகத்தில் வரும் தில்லைக்கண் என்பவள் குறிப்பிடுகின்றாள். குடும்பவிளக்கும், இருண்டவீடும் பெண் கல்வியை விளக்கும் வகையிலே படைக்கப்பட்டுள்ளன.

பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பெண்கள் கல்வி பெற வேண்டும் என்று பாரதியார் கூறினார். ஆனால் பாரதிதாசனோ பெண்கள் தொழிற்கல்வியையும் பெற வேண்டும் என்னும் தமது விருப்பத்தை,

*"வானூர்தி செலுத்தல் வைய*
*மாக்கடல் முழுதளத்தல்*
*ஆனஎச் செயலும் ஆண்பெண்*
*அனைவர்க்கும் பொதுவே!* *(கு.வி., ப.70)*

என்று வெளிப்படுத்துகிறார்.

## *பெண்மணம்*

இல்லறத்தின் கால் நாட்டுவிழாவே திருமணம். இது வாழ்வில் ஒருநாள் வருகின்ற விழா ஆயிரங்காலத்துப் பயிரை உருவாக்கும் பெர்ன்விழா. இத்தகு திருமணம் பெண்களின் வாழ்வைச் சீரழிக்கும் பேரிடியாகி விடுவதையும் பாரதிதாசன் காண்கிறார். பெண்ணின் நலன்களைப் பாதிக்கும் திருமணம் பற்றியும் பாடுகின்றார். குழந்தைமணம், கைம்மை—மறுமணம், பொருந்தாமணம், காதல் மணம் என்னும் நிலைகளில் பெண்ணின் திருமணத்தைப் பாரதிதாசன் பார்ப்பதைக் காணமுடிகின்றது.

## *குழந்தைமணம்*

பால்குடி மறந்து தன் தோழியரோடு சிற்றில் இழைக்கும் பருவத்தில் பெண்குழந்தைக்குத் திருமணம் செய்து வைக்கும் கொடிய செயலைக் கண்டு பாரதிதாசன் பதறுகிறார். அறியாத வயதில் அடுத்தவர் செய்த தவறுக்காகப் பச்சிளங் குழந்தைத் தவிப்பதை,

*சின்ன வயதினில் என்றனை யோர் – பெருஞ்*
*சீமான் மணந்தனன் செத்துவிட்டான் – எனில்*
*அன்னது நான்செய்த குற்றமன்று – நான்*
*அமங்கலை என்றுகண் ணீர்சொரிந்தாள்"*

(பா.க., ப.62)

என்று மொழிகிறார். குழந்தை மணத்தால் விதவையான ஏழுவயதுக் குழந்தை வீட்டிலிருக்கும்போது இரண்டாம் தாரத்தோடு கொஞ்சி மகிழ்கிறார் தந்தை. குழந்தையோ தன் பாட்டியின் மடியில் தலைவைத்து அழுது கண்ணீர் வடிக்கிறது. அதனைக் கேட்ட பாட்டியும் கண்ணீர் வடிக்கின்றாள். அதனை,

*"பின்நிலை எண்ணிப் பாட்டி பெரிதும்*
*அழுத கண்ணீர் வெள்ளம். அந்தக்*
*குழந்தை வாழ்நாட் கொடுமையிற் பெரிதே"*

*(பா.க., ப.99)*

என்று கூறுகிறார். பிள்ளைப் பருவத்திலே விதவைக் கோலம் கொண்ட பெண் வாழ்நாள் முழுக்கப் பெரும்பாடுபடவேண்டும் என்ற கவலை பாரதிதாசனின் வார்த்தைகளில் தொனிக்கிறது.

## கைம்மையும் மறுமணமும்

கணவனை இழந்தபெண் கைம்மை வாழ்வு ஏற்க வேண்டும் என்று இந்தச் சமுதாயம் திணிக்கின்றது. இக்கொடிய வழக்கத்தால், பெண் பூவிழந்து, பொட்டிழந்து, பொன்னிழந்து, புன்னகையும் இழந்து வாழ்நாளெல்லாம் வாட வேண்டியுள்ளது. இந்நிலையை மாற்ற விரும்பிய பாரதிதாசன்,

*பைந்தமி ழைச்சீ ராக்கக்*
*கைம்மை என்னும்சொல் நீக்கப்*
*பறந்து வாழ அழகியமயிலே*
*இறந்த கால நடைமுறை தொலையட்டும்"* *(பா.க. ப.133)*

என்று பாடுகிறார். தமிழிலிருந்து கைம்மை என்ற சொல்லையே நீக்க வேண்டும் என்று அவர் கூறுவது விதவைகளின் மீது அவருக்கு இருந்த இரக்க உணர்வைக் காட்டுகிறது. ஆண், விதவைப் பெண்ணின் மணத்திற்குத் தடைபோடுகிறான். ஆனால் மனைவியை இழந்த ஆடவன் திருமணம் செய்து கொள்கிறான். இதைக்கண்டு,

*"பெண்ணுக்கொரு நீதிகண்டீர்*
*பேதமெனும் மதுவையுண்டீர்!*
*கண்ணிலொன்றைப் பழுதுசெய்தால் கான்றுமிழாதோ?*
*கான்றுமி ழாதோ புவிதான் பழியாதோ"* *(பா.க. ப.103)*

என்று சாடுகின்றார்.

குழந்தை மணத்தால் விதவையாகித் தவிக்கின்ற பிள்ளைகளும் உள்ளனர். கணவனை இழந்த இளம் பெண்களும் உள்ளனர். இவ்விளம் விதவையரின் கைம்மைத் துயரொழிய மறுமணத்தைப் பாரதிதாசன் பரிந்துரைக்கின்றார். இறக்கும் தறுவாயிலுள்ள கணவன் தன் மனைவியிடம்,

*கடும்பிணி யாளன்நான் இறந்தபின் மாதே!*
*கைம்பெண்ணாய் வருந்தாதே பழிஎன்றன் மீதே*
*அடஞ்செய்யும் வைதீகம் பொருள்படுத் தாதே*
*ஆசைக் குரியவனை நாடு–மகிழ்வோடு–தார்சூடு நலம்தேடு*

(பா.க., ப.101)

என்று கூறுகின்றான். மணாளனே தன் மனைவியைப் பார்த்து "நீ மறுமணம் செய்து கொள்" என்று சொல்வது புரட்சிக் கவிஞரின் மனத்தில் உதித்த புரட்சிச் சிந்தனையாகும்.

## பொருந்தா மணம்

பெண்ணுக்குப் பொருத்தம் இல்லாதவனையும், பிடிக்காதவனையும் இணைத்து வைக்கும் பொருந்தா மணத்தைப் பாரதிதாசன் தடுக்க நினைக்கிறார். நரைத்த கிழவனுக்குத் திருமணம் செய்து வைத்தால் தன் மகள் வாழ்வில் ஒரு சுகமும் காணாது தற்கொலைக்கு முயன்றதைக் கண்ட தாய்,

*மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!*
*மனம்பொருந் தாமணம் மண்ணாய்ப் போக!*
*சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!*
*நீங்கள், மக்கள் அனைவரும்*
*ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே!* (பா.க., ப.95)

என்று அலறுகின்றாள்.

## காதல்மணம்

பெண்ணும் ஆணும் இல்லற வாழ்வில் சிறப்பாக வாழ்வதற்குக் காதல் மணம் கைகொடுக்கும் என்பது பாரதிதாசனின் கருத்து. பெற்றவர்கள் பார்த்துத் திணிக்கும் மணமகனை மணக்கும் நிலையைப் பெண்கள் மாற்ற வேண்டும். மாறாக அவளே தன் மனதுக்குப் பிடித்தவனைத் தெரிந்து மணக்க வேண்டும். இதனை,

*கற்றவளே ஒன்று சொல்வேன் – உன்*
*கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்*

*(பா.க., ப.99)*

என்று பாரதிதாசன் மொழிகிறார்.

பெண்களே தங்கள் கணவரைத் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும் பேரின்பம் உலகில் இல்லை என்று பாரதிதாசன் நினைக்கிறார். தங்கள் மகள் காதலன் ஒருவனைத் தெரிந்தெடுத்திருக்கிறாள் என்ற செய்தியை அறிந்த பெற்றோரின் மகிழ்ச்சி மூலம் இதனைப் பாரதிதாசன் நமக்கு வெளிப்படுத்துகிறார். மகளின் தோழி மூலம் இச்செய்தியறிந்த தந்தை,

*"பெண்பெற்ற போது பெருமை பெற்றோம்*
*வண்ணமேனி வளரவளரஎம்*
*வாழ்வுக்கு – உரிய வண்மை பெற்றோம்*
*ஏழ்ந ரம்புகொள் யாழ்போல் அவள்வாய்*
*இன்னான் இடத்தில் என்அன் பென்று*
*சொன்னதால் இன்பம் சூழப் பெற்றோம்"*

(பா.க., ப.186–187)

என்று கூறுகிறார். தாயோ, தன் மகளின் கூற்றைத் தான் நேரில் கேட்காததற்காக, வருந்துகிறாள்.

*"நான் கேட் கும்பேறு பெற்றிலேன்"*

என்று எண்ணி ஏங்குகிறாள்.

## ஒருவன் – ஒருத்தி

பெண்ணுக்குக் கற்பு நெறி விதித்ததுபோல ஆணுக்கும் கட்டுப்பாடு வேண்டும். ஒரு ஆடவன் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் உரிமையைத் தடுக்க வேண்டும். இவை போன்ற எண்ணங்களும் பாரதிதாசனின் பாடலில் வெளிப்படுகின்றன. பலதார மணத்தடைச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியதை அறிந்த பெண்ணொருத்தி,

*கன்னி ஒருத்திதான் ஒருவனுக் கென்னும் சொல்லைக்*
*கட்டாயம் ஆக்கினார் ஏதென் மகிழ்ச்சிக் கெல்லை"*

(பா.க., ப.426)

என்று மகிழ்கின்றாள்.

## *பொது நலத்தொண்டு*

மனிதன் தன்னலம் கருதுபவனாக இருக்கக்கூடாது. சமுதாயத்துக்கு உதவும் பொது நலப்பண்பு உள்ளவனாகவும் இருக்கவேண்டும். குடும்பவிளக்குத் தலைவனும் தலைவியும் பேசும்போது மேற்குறித்த கருத்து பரிமாறப்படுகிறது. மேலும் பாரதிதாசன்,

*என்பும் தோலும் வாடுகின்றார்*
*'ஏழை' என்ப தெண்ணார் அன்றோ!*
*துன்பம் நீக்கும் மக்கள் தொண்டு*
*சூழ்க வையம் தோ-ழி-வா-ழி*

என்று பாடுகிறார். மனிதன் தன்னால் இயன்ற பொதுத் தொண்டு செய்ய வேண்டும் என்ற கருத்து இதனால் பெறப்படுகிறது.

## குடும்பமேம்பாடு

நல்ல குடும்பம் பல்கலைக் கழகமாகும். குடும்ப முன்னேற்றமே நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படை. குடும்ப முன்னேற்றம் தலைவன் – தலைவி கையிலுள்ளது. இதனை உணர்ந்த பாரதிதாசன் தலைவன்–தலைவி ஆற்ற வேண்டிய குடும்பக் கடனுணர்வுகளை வலியுறுத்துகிறார். தலைவன்–தலைவி கடன். பிள்ளை வளர்ப்பு, விருந்தோம்பல், சிக்கன வாழ்வு, முதியோர் பேணல் என்ற நிலைகளில் பாரதிதாசன் குடும்பக் கடனுணர்வைப் புகட்டுகிறார்.

### தலைவன்-தலைவி கடன்

குடும்பத்தின் தலைவன், தலைவி தம் குடும்பத்தைப் பொறுப்போடு நடத்த வேண்டும் என்று எண்ணுகிறார். 'குடும்ப விளக்கு' என்னும் கதைப் பாடல் குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சான்று. குடும்பவிளக்குத் தலைவன் வணிகம் செய்து பொருள் ஈட்டுகிறான். குடும்பத் தலைவியோ குடும்பத்தைக் கோயிலாக மாற்றுகின்றாள்.

*"ஒட்டடைக் கோலும், கையும்*
*உள்ளமும் விழியும் சேர்த்தாள்*
*கட்டிய சிலந்திக் கூடு*
*கறையானின் கோட்டை யெல்லாம்*
*தட்டியே பெருக்கித் "தூய்மை"*
*தனியர சாளச் செய்து* (கு.வி. ப.11)

என்று தலைவியின் குடும்பப் பொறுப்புக் கூறப்படுகிறது.

## பிள்ளை வளர்ப்பு

பிள்ளைகளைப் பெறுவதைக் காட்டிலும், அவர்களைச் சிறந்தவர்களாக வளர்ப்பதில்தான் பெற்றோருக்குச் சிறப்பு உள்ளது. பெற்றோர் வளர்ப்புக்கு ஏற்றவாறுதான் பிள்ளைகள் இருக்கும் என்பதை,

*"மடமையில் மூழ்கி மடிகின்றான் அவன்*
*தன்மா னத்தைச் சாகடிக்கின்றான்*
*மரக்கட்டை போல் வாழ்ந்து வந்தான்*
*இந்த நிலைக்கெல்லாம் ஈன்றவர் காரணர்"*
(பா.க., ப.357)

என்று குறிப்பிகின்றார். இந்த இழிநிலை மாற்றிப் பிள்ளைகளைப் பொறுப்புடன் வளர்க்க வேண்டும் என்பதை,

*"பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்*
*அவள்வாத் திச்சி; அறைவீடு கழகம்"*

என்று கூறுகின்றார். பிள்ளைகளை அளவோடு பெற்று அறிவோடு வளர்க்க வேண்டும். தேவைப்படின் கருத்தடையும் செய்து கொள்ளலாம் என்பது பாரதிதாசனின் உள்ளக்கிடக்கை இதனை,

*"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்*
*கதவொன்று கண்டறிவோம். இதிலென்ன குற்றம்*
*சாதலுக்கோ பிள்ளை? – தவிப்பதற்கோ பிள்ளை?*
*சந்தான முறைநன்று; தவிர்க்குமுறை தீதோ?"*

(பா.க., ப.106)

என்னும் பாடலால் உணரலாம்.

## விருந்தோம்பல்

தமிழரின் இல்வாழ்வின் சிறப்பே விருந்தோம்பலில் உள்ளது என்பது பாரதிதாசனின் எண்ணம். விருந்தோம்பல் செயலில் மனித நேயம் வெளிப்படுகிறது. வந்த விருந்தினரை முகமலர வரவேற்க வேண்டும் என்பதை,

> "பொன்துலங்கு மேனி
> புதுமெருகு கொள்ள முகம்
> அன்றலர்ந்த செந்தா
> மரையாக – நன்றே
> வரவேற்றாள்" (கு.வி. ப.38,39)

என்று காட்டுகிறார். விருந்தினரை வரவேற்பதிலிருந்து, உணவு கொடுத்து, வழியனுப்புவது வரைப் பொலிவுடன் குடும்பவிளக்கிலே தருகிறார்.

## சிக்கன வாழ்வு

தன் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்தாதவன் பல இன்னல்களுக்கு ஆளாகின்றான். தன் நிலைக்கு மீறிய ஆடம்பர வாழ்வு மனிதனைக் கடனுக்குள் தள்ளுகிறது. இவ்வாறு பெருகிய கடன் தொல்லை மனித நலனையே கெடுக்கிறது என்பதை 'மாண்டவன் மீண்டான்' என்ற கவிதையில்,

> "ஏற்றகடன் தொல்லையினால் நோய்கொண்ட தந்தை
> ஏ! என்று கூச்சலிட்டான், நிலைதவறி வீழ்ந்தான்"
> (பா.க., ப.118)

என்று பாரதிதாசன் விளக்குவார். கடன் வாங்கும்போது இருக்கும் மகிழ்ச்சி அதனைக் கொடுக்கும் போது இராது என்பதை,

> கொடுத்தவன் வட்டியொடு கேட்கையில் கொலைபடும்
> ஆதலின் அருமைத் தமிழரே கேட்பீர்.
> கடன்படும் நிலைகளுக்கு உடன்பட வேண்டாம்
> (பா.க., ப.503)

என்று காட்டுகிறார். கடன் வாங்காத வாழ்வுக்கு வழி சிக்கனமே என்பதை வள்ளுவர் வழி நின்று,

"ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை" எனப் புகன்ற
தேவர் நன்னெறி புகலெனத்
தாவுக தமிழகம் மீளுதற் பொருட்டே (பா.க., ப.504)

என விளக்குகின்றார்.

## முதியோர் பேணல்

முதியோர் நலன் பேணிக் காப்பது குடும்பத் தலைவன்–தலைவியின் கடமையாகும். முதியோர் இல்லங்கள் இன்று தோன்றிக் கொண்டிருக்கின்றன. இந்நிலை வரக்கூடாதென்பதை உணர்த்தும் முன்னெச்சரிக்கையாகவே பாரதிதாசன் குடும்பவிளக்கில் முதியோர் பேணுதலை விளக்கியுள்ளார். குடும்பவிளக்கின் தலைவி மாமன்–மாமியைக் கவனிக்கும் முறை நம்மை வியக்க வைக்கின்றது. மாமியார் – மருமகள் உறவு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று பாரதிதாசன் தெளிவாக விளக்குகிறார். மாமன்–மாமியாரின் உடல் நலக்குறைவைக் கண்ட மருமகளின் செயல்பற்றிப் பாரதிதாசன்,

*நாடியில் காய்ச்சல் என்றே*
*நன்மருந் துள்ளுக் கீந்தாள்*
*ஓடிநற் பாலை மொண்டு*
*மருவுலைக் கஞ்சி ஊற்றி,*
*வாடிய கிழவர்க் கீந்தாள்*
*மாமிக்கோ தலைநோக்காடாம்*
*ஓடிடச் செய்தாள் மங்கை,*
*ஒரே பற்றில் நொடி நேரத்தில்!* *(கு.வி., ப.18)*

என்று கூறுகின்றார். குடும்பத்தில் இப்படிப்பட்ட மருமகள் வாய்த்தால் குடும்ப நேயம் பெருகும் என்பது பாரதிதாசனின் எதிர்பார்ப்பாகும்.

## முடிவுரை

இதுகாறும் கூறியவற்றிலிருந்து சில முடிவுக்கு வரலாம். சமூக உணர்வோடு எழுதத் தொடங்கியவர் பாரதிதாசன். மனிதனை மனிதனாக மதிக்கும் மானுடநேயம் அவரிடம் இயல்பாகவே

அமைந்திருந்தது. இந்திய நாட்டின் அரசியல் விடுதலையையும், சமூக விடுதலையையும் பாடிய பாரதியின் தாக்கம் பெற்றவராக இவர் விளங்கினார். தமிழ்ச் சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் சமுதாயத் தீங்குகளைப் பறைசாற்றிய பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் இவருக்குப் புத்துணர்வு தந்தது. பகுத்தறிவு இயக்கத்தின் கருத்துக்களைக் குடியரசு இதழில் எழுதும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இதனால் இவருடைய சமுதாயப் பார்வை விரிந்தது. சமூக உயர்வைத் தடுக்கும் மூட நம்பிக்கைகளைத் தகர்க்கும் தன்னம்பிக்கையோடு பல பாடல்கள் எழுதத் தொடங்கினார்.

மானுட நேயத்தின் பல்வேறு படிநிலைகள் பாரதிதாசனிடம் படிந்திருந்தன. பாரதிதாசன் தன்னுடைய படைப்புகளில் அரசியல், பொருளியல், சமூகவியல் என்னும் முந்நிலைகளில் மானுட நேய உணர்வைச் செலுத்தினார்.

உயர்வு, தாழ்வு இல்லாத ஒப்பற்ற சமுதாயம் படைப்பதற்குக் குடியாட்சியே துணை செய்யும் என்று பாரதிதாசன் நம்பினார். குடியாட்சி மனிதனை மனிதனாக மாற்ற அவனுக்குக் கல்வி கொடுக்க வேண்டும் என்று விரும்பினார். பறவை, விலங்குகளும் விரும்பாத அடிமை வாழ்வில் மனிதன் அகப்படலாகாது என்பது அவரின் விருப்பமாக இருக்கிறது. விடுதலை பெற்ற மனிதன் 'தேவர்' ஆவான் என்று கருதுகிறார்.

தாய்நாட்டு மக்களின் ஏழ்மை நிலைகண்டு பாரதிதாசனின் மனம் குமுறுகிறது. பாடுபடும் பாட்டாளி பசியால் வாடும் நிலைகண்டு பொங்கினார். அதனால் பொருளாதாரச் சமத்துவத்தைக் கொண்டுவர விரும்பினார். சுரண்டலும், சுயலாபத் தேடலும் ஒழிவதற்குப் பொதுவுடைமைக் கொள்கையே ஏற்றது என்று கருதினார். தொழில்வளம் பெற்றுத் தாய்நாடு உயர வேண்டும் என்று எண்ணினார். தொழிலாளர் மகிழ்ந்தால் நாட்டில் கலகம், கவலை எல்லாம் ஒழியும் என்று மொழிந்தார். வணிகம் செய்வோர் பொதுநல உணர்வுடன் செயல்பட வேண்டும் என்று கூறினார்.

தமிழ்ச் சமுதாயத்தை வளர்ச்சியடையச் செய்யும் உந்துதல் பாரதிதாசனிடம் அமைந்திருந்தது. சமூகத்தில் மண்டிக் கிடந்த

சமயஞ்சார்ந்த, நடைமுறைப் பழக்க மூடநம்பிக்கைகளைக் களைய அரும்பாடுபட்டார். பிறப்பினால் பேதம் கொள்ளும் நிலையை மாற்றிச் சமத்துவம் வளர விரும்பினார். மானுடத்தின் பாதியான பெண்ணின் அடிமை நிலைகண்டு நெஞ்சு காய்ந்தார். பெண்ணுக்குக் கல்வி தந்தால்தான் நாடு முன்னேறும் என்று நினைத்தார். பெண்கள் வாழ்வைச் சிதைக்கும் மூட மணங்களை ஒழிக்க நினைத்தார். புரட்சி மணங்களைப் புகுத்த எண்ணினார். குழந்தை மணத்தின் கொடுமை கண்டு சீறினார். விதவை காதல் உணர்வு பெறுவதும், மறுமணம் செய்வதும் உரிமை என்று முழங்கினார். ஒருத்திக்கு ஒருவன் என்பது போல் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு வேண்டும் என்றார்.

தன் தேவையை நிறைவு செய்வதோடு பொதுநலத் தொண்டில் ஈடுபடுவதும் வாழ்க்கையின் நோக்கமாகும் என்று உணர்த்தினார். குடும்ப நலமே நாட்டு நலம் என்று சாற்றினார். குடும்பம் சிறப்பாக அமைவதற்குத் தலைவனும், தலைவியும் தங்கள் கடன்களைச் செம்மையுறச் செய்ய அறிவுறுத்தினார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை முழுக்கவனத்துடன் வளர்க்க வகை செய்தார். பண்டைத் தமிழர் நெறியான விருந்தோம்பல் சிறப்புகளைக் கூறினார். கடன்தொல்லை பெருந்தொல்லை என்றுணர்ந்து சிக்கன வாழ்வு வாழ வழி சொன்னார். முதியோரின் நிலையறிந்து அவர்களை அன்புடனே பேணுவது இல்லறத்தார் கடன் என்று புகன்றார்.

இவையெல்லாம் மானுடநேயம் கொண்ட பாரதிதாசன் தம் விசாலப் பார்வையால் சமுதாயத்தைப் பார்த்துள்ளார் என்பதையும் மானுட நேயத்தோடு தம் படைப்புகளை படைத்தார் என்பதையும் காட்டுகின்றன. இதனால் சமுதாய வளர்ச்சிக்கேற்ற கருத்துகளைப் பாரதிதாசன் உள்ளன்போடு எடுத்துக் கூறியுள்ளமை புலனாகின்றது.



# மொழி மீட்புப் போராளி

**உ.சண்முகநாதன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், செந்தமிழ்க்கல்லூரி
மதுரை – 01.

## முன்னுரை

*"ஆதிமொழிஎன் அருமைத் தமிழ் என்றே*
*ஓதி உலகுக் குணர்த்திடவே தீதின்றி*
*ஆவன செய்பே ரறிஞர்அண் ணாமலையின்*
*தேவநே யப்பாவா ணர்"*

என தம் பாவால் பாவாணர்க்குப் பாமாலைச் சூட்டினார் பாவேந்தர் பாரதிதாசனார். உலகில் முதன்முதலில் மாந்தன் பிறந்தகம் "லெமூரியாக்கண்டம்" என்றும் அவன் பேசிய மொழி "தமிழ்" என்றும் தன் நுண்மாண் நுழைபுலத்தால் உலகிற்குப் பறைசாற்றியவர் "மொழிஞாயிறு" ஞா.தேவநேயப்பாவாணர் ஆவார். மறைமலைஅடிகள் அவர்கள் தனித்தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டார் என்றால், அதை வளர்த்து பெரும் மரமாக்கிய பெருமை பாவாணரைச் சாரும். அன்னைத்தமிழின் சிறப்பையும், தாய்மைப்பண்பையும், தலைமைப் பண்பையும், செவ்வியல் தன்மையையும் தனது வன்மையான மொழி ஆராய்ச்சியால் தரணிக்கு அறிமுகம் செய்த பெருமை பாவாணருக்கே உண்டு. தனி ஒருவர் மட்டுமே ஆராய்ச்சி மேற்கொண்டு தனித்தமிழின் குணச்சிறப்பை வெளியிட்டு தாய்மொழித் தமிழைக் காத்திட்ட மொழி மீட்புப்போராளியாக விளங்கியவர் 'மொழிஞாயிறு' ஞா.தேவநேயப்பாவாணர் அவரைப்பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் தலையாயப் பணியாக அமைகின்றது.

## பாவாணர் என்றோர் "பைந்தமிழ் வேந்து"

*"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று*

என்று கூறுவார் திருவள்ளுவப் பெருமகனார். ஒருவர் பிறக்கும் போதே புகழுடன் பிறப்பது கிடையாது. செல்வந்தன் வீட்டுப் பிள்ளையாகப் பிறக்கலாம். ஆனால் புகழுடன் பிறந்தான் என்று கூறுவது பொருந்தாது. எவர் ஒருவர் தான் மேற்கொண்ட துறையில் புகழுடன் சிறந்து விளங்குகிறாரோ அவர் தோன்றியது புகழ் நிலையாகும். அவ்வாறு இல்லாமை ஆயின் அவர் அத்துறையில் தோன்றாது (செல்லாது) இருத்தல் நன்று என விளக்கம் தருவார் மூதறிஞர் தமிழண்ணல் அவர்கள். இவ்வாறு வள்ளுவரின்

இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தவர் தான் பாவாணர் பெருமகனார். தான் காலடி பதித்திட்ட துறையில் வரலாற்றைப் பதித்திட்ட "பைந்தமிழ் வேந்து" ஆக விளங்கினார் பாவாணர். அரசு எந்தவித உதவியும் செய்யாத போதும் "கருமமே கண்ணாகவும்" 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றும் போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரி தூற்றுபவர் தூற்றட்டும்; ஏற்றதோர் கருத்தை எனதுள்ளம் எடுத்துரைக்கும் என்ற மனவலிமையும் கொண்டவர் மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் அவர்கள். "தமிழே என்பாவாகவும், தசையாகவும், குருதியாகவும் வாய்க்கப்பெற்ற தமிழின் முழுஉருவம் பாவாணர் என்பார்". பாவலரேறு பெருஞ்சித்திரனார். தமிழின் தமிழினத்தின் பெருமைகளை உலகறியச் செய்தவர். இரட்டடிப்பு செய்யப்பட்ட தமிழர்களின் வரலாற்றை வெளிக்கொணர்ந்த தமிழ் ஞாயிறாகவும், மொழி மீட்புப் போராளியாகவும் விளங்கியவர் பாவாணர். ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல்லாரையும் மிஞ்சி தப்பிலக்கணம் கண்ட புல்லரும் அஞ்சும்படி செய்வித்த மொழி அறிஞர். மொழிகளின் வேர்ச்சொல் ஆராய்ச்சி செய்து மூலமொழி எதுவெனும் கேள்விக்கு தமிழே உலகின் முதல்மொழி மற்றமொழிகளுக்கு மூலமொழி என உரைத்திட்டவர். வறுமை தன்னைச் சூழ்ந்த போதும் செம்மையான முறையில் தமிழ்மொழியின் சீர்மையை வெளிப்படுத்திய மொழி மீட்புப்போராளி தான் பாவாணர் அவர்கள்.

### *பாவாணரின் பணிகள்:*

1902 ஆம் பெப்பிரவரி மாதம் 7 ஆம் பக்கல் வெள்ளிக்கிழமை அன்று பிறந்தார் பாவாணர். இளம் வயது பெயராக அமைந்தது தேவநேயன் என்பதாகும். பின்னர் வளர்ந்து வந்து பள்ளியில் ஆறாம் படிவம் (11ஆம் வகுப்பு) வரைபயின்று, அதன்பின் ஆசிரியப் பயிற்சி பெற்றார். 1921 ஆம் ஆண்டு கோழபுரம் (சீயோன்மலை) விடையூழியக் கழகப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1922 ஆம்பூரில் ஆசிரியர் பணி. 1924 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் தேர்வில் வெற்றி பெற்றார். சென்னை திருவல்லிக்கேணிக் கெல்லற்று உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக ஓராண்டு பணிபுரிந்தார். 1925 ஆம் ஆண்டு தாம்பரம் கிருத்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1926 ஆம் ஆண்டு திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப்புலவர் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். திருச்சிப்புத்தூர் ஈயர் மேற்காணியார் உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக (9) ஒன்பது ஆண்டுகள் பணியாற்றினார்.

1941 ஆம் ஆண்டு சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழ் ஆசிரியராக ஓராண்டு பணிபுரிந்தார். பிறகு சேலம் நகராண்மைக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பன்னிரண்டு ஆண்டுகள் பணி செய்தார். 1956 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழித்துறை இணைப் பேராசிரியராகப் (வாசகர், Reader) பணியாற்றினார். பிறகு தமிழ் நாட்டரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். (08.05.1974). இவ்வாறு 1 ஆண்டு நடுநிலைப் பள்ளியிலும், 22 ஆண்டுகள் உயர்நிலைப்பள்ளியிலும் 12 ஆண்டுகள் தமிழ்ப்பேராசிரியராகவும் பணிபுரிந்திட்ட பாவாணர் அவர்கள் மொழி ஆராய்ச்சி, சொல்லாராய்ச்சி வரலாற்று ஆராய்ச்சி, பண்பாட்டு ஆராய்ச்சி, இசை ஆராய்ச்சி எனப் பல்துறையிலும் ஆராய்ந்து தமிழின் தனித்துவத்தை வெளிப்படுத்தினார். 1931 ஆம் ஆண்டு செந்தமிழ்ச்செல்வி இதழில் "மொழி ஆராய்ச்சி" எனும் முதற்கட்டுரையினை எழுதினார்கள். சொல்லாராய்ச்சி கட்டுரைகள், வேர்ச்சொல் கட்டுரைகள், ஒப்பியல் மொழி நூல், தமிழர் மதம், தமிழர் வரலாறு, தமிழர் திருமணம், இசைத்தமிழ்க்கலம்பகம், **The primary Classical Language of the World, The Language Problem of Tamilnadu and its Logical Solution, The Lemurian Language its Ramifications.** என்ற ஆங்கில நூல்களும், சென்னை பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு, இசையரங்கு இன்னிசைக்கோவை, சிறுவர் பாடல் திரட்டு, கிருத்துவக் கீர்த்தனம், தமிழ் வரலாறு, திருக்குறள் தமிழ் மரபுரை (முப்பால்களுக்கும்) பண்டைத்தமிழர் நாகரிகமும், பண்பாடும், திராவிடத் தாய், இயற்றமிழ் இலக்கணம் என சுமார் 50க்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களை அருளியவர் பாவாணர் அவர்கள். 'பாவாணரின் நூல்கள் அனைத்திலும் பாவாணரது சொல்லாராய்ச்சியும் தனித்தமிழ்ப்பற்றும் சுடர் விடுகின்றன' என்பார் சிற்பி பாலசுப்பிரமணியனார். இவ்வாறு வேர்ச்சொல் வித்தகராகவும், தொகுப்புக் கலைச் செம்மலாகவும், 'அகரமுதலி' என்ற சொல்லிற்கு ஆசானாகவும், தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு என்று உணர்த்திய மெய்யியல் பேராசிரியனாகவும், இலக்கண, இசைப் பித்தராகவும் விளங்கினார் பாவாணர். சொல்லாராய்ச்சியும், மொழிஆராய்ச்சியும் எனக்கு இன்பம் தரும் கலைகள் என்று கூறியுள்ளார். அவரது வேர்ச்சொல் ஆய்வு 1931ல் தொடங்கி அவர் மறையும் வரையிலும் (1981) நடந்தது என்பதை நம்மால் உணர முடிகிறது.

வடமொழி வரலாறும் தலைநாகரிகமும் புகழ் வேண்டி எழுதுபவை அல்ல; தமிழை வடமொழியில் இருந்து மீட்பதற்கு எழுதுபவை என்று விளக்குகிறார் "மொழி மீட்புப்போராளி" தேவநேயப்பாவாணர் "தமிழ் மொழி ஆராய்ச்சியில் பாவாணரின் விளக்கம் நம்மைத் தலைநிமிர்ந்து நிற்க வைக்கிறது. அவருடைய கருத்துக்கள் தமிழனின் முதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன. பாவாணர் அவரை நான் தமிழ்த் தெய்வமாகக் கருதுகிறேன்" என்று பாவாணரின் இறப்பிற்குப் பின் இரங்கல் கூட்டத்தில் அப்போதைய முதல்வர் ம.கோ.இராமச்சந்திரனார் பேசினார். இத்தகைய பெரும் மதிப்பைப் பெற்ற பாவாணர் அவர்கள் 23 மொழிகளைக் கற்றுத் தெளிந்து தேர்ச்சி பெற்றவர். அயல்மொழிப்புலமைப் பெற்று அன்னைத் தமிழின் அடிச்சுவற்றை அறிமுகப்படுத்தியவர். "உலகத் தமிழ்க் கழகம்" எனும் அமைப்பைத் தோற்றுவித்து "தனித்தமிழ்" பரப்பியவர். ஆங்கிலேயர் நீங்கும்வரை யாழ்ப்பாணம் தனிநாடாக இருந்தமையால் அந்நிலை மீள வேண்டும். அன்றேல் தமிழும் சிங்களத்தோடொத்த ஆட்சி மொழியாதல் வேண்டும் என அறைகூவல் விடுத்தது அவரது தமிழ்த் தேசியக் கருத்தியலுக்கு உதாரணமாக அமைந்துள்ளது எனலாம்.

பாவாணர் செய்வித்த செந்தமிழ் அகர முதலியில் வேறு அகர முதலியில் சொல்லப்படாத சொற்களை எடுத்துக்காட்டிப் பொருள் கூறியுள்ளார். தவறான சொல் வடிவத்தைத் திருத்தினார். தவறான பொருள் திருத்தம் கொணர்ந்தார். தகுந்த முறைப்படி வரிசைப்படுத்தினார். எல்லாச் சொற்களுக்கும் கூடுமானவரை ஆரிய–திராவிட–வடமொழி இனச்சொற்களைக் காட்டினார். வேர்ச்சொல் காட்டினார். தவறான மூலங்களைச் சுட்டிக்காட்டினார்; இவ்வகையில் பாவாணரின் மொழி ஆராய்ச்சிப்பணி சிறப்பு பெற்றிருப்பதை அறிஞர்கள் கண்டு உரைக்கின்றனர். இவ்வாறு பாவாணரின் பணி தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளவரை நிலைத்துநிற்கும் தன்மையுடையதாக விளங்கிற்று. அவரது நூல்கள் அனைத்தும் தமிழ் வரலாற்றுக் களஞ்சியங்களாக காட்சி தருகின்றன என்றே கூறலாம். உரையாசிரியர்கள் வடசொல் என்று கூறிய பலவும் தென்சொல் என்றே தெளிவாகிறது; உலகமொழி பலவற்றிலும் தமிழ்மொழி கலந்துள்ளது; தமிழின் தாய்மை, மேன்மை, தொன்மை போன்றவற்றை அறியமுடிகிறது. மார்க்சுமுல்லர், கால்டுவெல் போன்றவர்களின் கருத்துக்கள் மெய்ப்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் முதன் முதலில் பேசியமொழி தமிழ்.

அம்மொழி தோன்றிய லெமூரியா கண்டமே எனலாம்; தமிழ் திராவிடத்திற்குத் தாய் ஆரியத்திற்கு மூலம் எத்தனையோ தென்சொற்கள் வடமொழியில் வாழ்வாங்கு வாழ்கின்றன என்பதை தமது ஆராய்ச்சி நூல்களின் வழி விளக்குகின்றார் பாவாணர் அவர்கள். “தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்கும் வடமொழியும் வட மொழியாளரும் கடப்பாடுடையரென்று “ஒப்பியன் மொழி” எனும் நூலில் கூறியுள்ளதை” தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார் மதிப்புரையாக கூறுகிறார். இவ்வாறு தமது ஆழமான புலமையின் மூலம் தமிழ் மொழியின் மீட்புப் போராளியாகப் பாவாணர் விளங்கியுள்ளார் என்றால் மிகையாகாது.

### *பாவாணர் பார்வையில் சமுதாயம் :*

மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களின் படைப்புகளில் சமுதாயச்சிந்தனைகள் பளிச்சிடுவதைக் காணமுடிகின்றது. பெண்ணுரிமைப் பேணுதல், சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை, கலப்புமணம், தமிழ்மொழிச் சிந்தனை, தமிழர் நாகரிக பண்பாடு போன்றவற்றை அவரது நூல்களில் ஆங்காங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழர் நாகரிகமும் பண்பாடும் அமைந்து பல்லாயிரம் ஆண்டுகளாகியும் இன்னும் பெண்டிர் சமன்மை ஏற்கப்படாதது பெரிதும் இரங்கத்தக்கதே என்றும்; பெண்டிர் நுகர்ச்சிப் பொருள் எனும் நிலைமையினின்று வாழ்க்கைத் துணைமை நிலைக்கு இன்னும் முற்றும் உயர்த்தப்படவில்லை. ஆணும் பெண்ணும் சமநிலை அடையாததைக்கண்டு இரங்கும் நிலையை “தமிழர் திருமணம்” எனும் நூலின் வழி அறிய முடிகிறது. மறைமலை அடிகளாரின் மகன் மறை திருநாவுக்கரசர் என்பவர் அவரது தந்தை பற்றிய வரலாற்றுப் பொத்தகத்தில் பாவாணரை ‘அரிசன்’ என்று கூறியுள்ளராம். இதனை அறிந்த பாவாணர் வெகுண்டு எழுகின்றார். சாதியை வெளிப்படுத்திய காரணத்தால் மடை திருநாவுக்கரசர் என்று திட்டி சுப்பையாபிள்ளைக்கு கடிதம் எழுதினாராம். மேலும் தமிழர் கடைப்பிடித்து வந்த சிறந்த அறம் கூட இக்குலப்பிரிவினையால் தடைபடும் என்று கருதினார் பாவாணர். “சாதி முறை ஒன்றே போதும் தமிழ் தாழ்த்தப்பட்டது; தமிழர் தாழ்த்தப்பட்டனர் என்பதற்கு என்கிறார் பாவாணர். தாழ்த்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டார் என்ற சொல்லும் தொடர்ந்து இருக்கக்கூடாது என்று வன்மையாக கண்டிப்பதை “மண்ணில் விண்” என்ற நூலில் காணமுடிகிறது.

கடவுள் உண்டு என்றோ; இல்லை என்றோ பாவாணர் வாதிடவில்லை. ஆனால் கடவுளின் பெயரால் பூசை செய்யும் ஆடம்பர முறையையும் வன்மையாகக் கண்டித்தார். தெய்வப் படிமைக்குப் படைக்கும் பொருள்கள் மக்கட்குப் பயன்படுவதாயிருத்தல் வேண்டும் என்றார். “குடங்குடமாய்ப் பாலைக் கொட்டுவதும், கலங்கலமாய் நெய்வார்த்து மலைவிளக்கெரிப்பதும் மன்னிக்கத்தகாத பொருளாட்சிக் குற்றமாகும் என “மண்ணின் விண்” எனும் நூலில் விளக்குகிறார். கலப்புமணத்தை ஆதரிக்கின்றார் பாவாணர். குலப்பிரிவினை ஒழியவும், அறிவாற்றலிற் சிறந்த மக்களைப் பெறவும் கலப்பு மணங்கள் பெருக வேண்டும் என்று கூறுகிறார். மாந்தன் நரகலை மாந்தனே வாரிச்சுமக்கச் செய்வது, நாகரிக மனிதனுக்கும் நாகரிக அரசிற்கும் கடுகளவுத் தகாது என்கிறார். அரசு செய்ய வேண்டியதெல்லாம் மானத்தொடு தன்முயற்சியால் வாழ்விற்கு தடையாயுள்ள இழிவை வேரறுப்பதே என்றும் பாவாணர் கூறியிருப்பது நோக்கத்தக்கது. தமிழின் தன்மையை இரண்டு விதமாக விளக்குகிறார் பாவாணர். 1. திராவிட மொழிகளை நோக்க தமிழ் நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளது. 2. தமிழ் என்றே தொடர்ந்து வழங்கி வந்துள்ளது. இதன் தாய்மைப் பண்பைக் காட்டுகிறது. அதாவது அதிலிருந்து பிரிந்த மொழிகள் வெவ்வேறு பெயர்களைத் தாங்கி இருக்க இது அதே பெயருடன் விளங்குகிறது என்று தமிழ்மொழிச் சிந்தனையை ஊட்டுகிறார் பாவாணர். இவ்வாறு பாவாணர் தமது படைப்புகளின் வாயிலாக சமுதாயச் சிந்தனைகளையும் விளக்கி நிற்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை

போராளிகள் பிறப்பதில்லை மாறாக உருவாக்கப்படுகிறார்கள். தமிழ்மொழியைத் தரம் தாழ்த்தியவர்களுக்கு அறிவாயுதம் கொண்டு அறிவுறுத்திய பெருமகனார் பாவாணர். தமிழுக்கும் தமிழினத்திற்கும் கிடைத்திட்ட அறிவுக்களஞ்சியம். தமிழின் பெருமையை பார் அறியச் செய்த மொழி ஆராய்ச்சியாளர். மொழி மீட்புப் போராளி, தனித்தமிழ் வளர்த்த தனித்தமிழ் போர்வாள்.. பாவாணர். இத்தகைய பெருமையுடைய மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணருக்கு மதுரையில் மணிமண்டபமும், அவரது நூல்களை நாட்டுடைமை செய்தும் தமிழக அரசு பெருமைப்படுத்தியது பெரும் சிறப்பாகும். அவரது படைப்புகள் அனைத்தும் அன்னைத்தமிழின் வரலாற்றை பிரதிபலிப்பவை என்பது நெற்றித்திலகம்.

# உள்ளி உவந்து ஈந்த வள்ளல்

தமிழாகரர் தெ. முருகசாமி.
புதுச்சேரி – 9

*உள்ளி உள்ளவெ லாம்உவந் தீயும்அவ்*
*வள்ளி யோரின் வழங்கின மேகம்*

என்பது கம்பர் வாக்கு. அயோத்தியில் மேகம் மழை பொழிந்ததாம்! எதுபோல? என்றால் வள்ளலைப் போல என்கிறார் கம்பர். ஈண்டு மேகம் போல் வள்ளல் வழங்குவதாகக் கூறாமல் வள்ளல்போல் மேகம் மழையை வழங்குவதாகச் சிறப்பித்தது ஏன்? அதற்கான சான்றுண்டா? எனச் சிந்திக்கத் தூண்டுவதே இக்கட்டுரையின் கருதுகோள்.

"உயர்ந்த தன் மேற்றே உள்ளுங்காலை" என்ற தொல்காப்பிய விதிப்படி உவமேயத்தினும் உவமை உயர்வுடையதாக இருக்க வேண்டும். மேலும் உவமைக்கும் உவமேயத்திற்கும் உள்ள பொதுத்தன்மை பொருத்தமாகவும் இருக்க வேண்டும். இவ்வடிப்படையில் கம்பரின் வாக்கை நோக்கினால் உவமேயமாகிய மேகத்தினும் உவமையாகிய வள்ளலின் வழங்கல் பண்பு மிக உயர்ந்ததாகக் கருதிக் கூறப்பட்டது எனலாம்.

மேகம் தான் விரும்பியவாறு பொழியும். எல்லா இடங்களில் பொழியாமல் ஆங்காங்கே ஒரோவழி பொழியும். பிறர் விருப்பத்திற்குப் பொழியாது. ஆனால் வள்ளலோ எந்த நேரத்திலும் தான் விரும்பியும் பிறர் கேட்டும் வழங்குவர் என்ற வேறுபாட்டால் மேகத்திற்கு வள்ளல் உவமையாகக் கூறப்பட்டார். பயன்கருதாமை என்பது மேகத்திற்கும் வள்ளலுக்கும் பொதுப்பண்பாயினும் மேகத்திற்கில்லாத உயர்பண்புகள் வள்ளலுக்குள்ளதால் வள்ளல் உவமையானார்.

வள்ளல் உயர்திணைப் பொருள். மேகம் அஃறிணைப்பொருள். அஃறிணைக்கில்லாத மன உணர்வு உயர்திணைக்கு உண்டு. அந்த மன உணர்வால் மகிழ்ந்துகொடுப்பதும் கொடுத்துப்பின் மகிழ்வதுமான சிறப்பு வள்ளலுக்கு உள்ளதுபோல் மேகத்திற்கு இல்லை என்பதையே கம்பர் சுட்ட வேண்டி உள்ளி, உள்ளவொம், உவந்து ஈயும் என்ற மூன்று அடைமொழிச் சொற்களை வள்ளலுக்கு வைரக்குப்பாயமாகக் கூறினார்.

உள்ளி–நினைந்து, உள்ளவெலாம் உவந்து – தம்மிடம் உள்ளன எதுவாயினும் அவற்றையெல்லாம் மனம் மகிழ்ந்து, ஈயும்–

தருகின்ற, அவ்வள்ளியோர் போல்—குறிப்பிடத் தகுந்த வள்ளலைப் போல மேகம் வழங்கியது. கொடையை வாணிகமாகப் பலன் கருதிச் செய்வோரும் உளர் என்பதால் அவரை விலக்கிப் பலன் கருதாது செய்யும் வள்ளலைக் குறிக்கவே கம்பர் அவ்வள்ளியோர் எனச் சேய்மைச் சுட்டைக் கூறி உண்மையான வள்ளலை அடையாளம் காட்டினார்.

கொடுப்பதற்கு முதலில் மனம் நினைக்கவேண்டும். நினைத்த மகிழ்வை முகம் மலர்ச்சியாகக் காட்ட வேண்டும். அம்முக மலர்ச்சியுடன் அன்பாக உரையாடிக் கொடுக்க வேண்டும். மனம், மொழி, செயல் என்ற மூன்றும் ஒன்றிய உணர்வுடன் கொடுப்பவரே வள்ளல் என்பது கம்பரின் கருத்து, இந்த முத்தரப்பு நிலை மேகத்திற்கு இல்லையென்பதால் 'உன்னி உள்ளவெலாம் உவந்தியும்' என்ற அடைமொழிப் பதங்கள் வள்ளலுக்கே பொருந்துவதாயிற்று. இப்பொருத்தத்திற்கான சான்று வேண்டுமெனின் அதற்குப் பாலவநத்தம் ஜமீன் பாண்டித்துரைத் தேவரைக் கூறலாம்.

வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாமல் கொடுப்பது வள்ளலுக்கான இலக்கணம் என்பர் உலகியலார். ஆனால் ஈவதில் உள்ள இன்பத்திற்கு ஈடில்லை என்பதால்தான் "ஈத்துவக்கும் இன்பம்" என்றார் அய்யன் திருவள்ளுவர். இன்பம் ஈதலால் வருமெனில் எத்தகு ஈதலால் என வினா எழுப்பினால் அதற்கான சரியான விடை "நற்செயலுக்கு ஈதலால்" என்பதாக அமையின் சிறப்பாக இருக்கும். அந்தவகையில் பாண்டித் துரைத்தேவர் செய்த நற்செயல் யாதெனில் இன்றுள்ள 'அபிதான சிந்தாமணி' என்ற அரிதானதொரு நூலைப் பதிப்பித்து வெளிக்கொணர உதவிய ஒன்றையே சிறப்பாகக் கூறலாம்.

அபிதான சிந்தாமணி என்பது ஓர் அகராதி நூல். சென்னைப் பச்சையப்பன் கல்வி நிறுவனத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றிய ஆ.சிங்காரவேல் முதலியார் என்பவர் தாமே பலகாலம் அரிதின் முயன்று தொகுத்து எழுதிய நூல்தான் அந்த அகராதி. எழுதிய அளவில் கைப்பிரதியாகவே புதைபொருளாய் எவருக்கும் தெரியாமல் அச்சிடப்படாமலிருந்த அதனை அச்சிட விழைவோர் உளரெனில் தரத்தயாராக இருப்பதாய் சிங்காரவேலர் ஒரு தினசரி நாளேட்டில் அறிவிப்பு செய்தார். கண்ணுற்ற தேவர் மகிழ்ந்தார். தமிழுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பு கிட்டியதாக நினைத்தார். தாமே சிங்கார வேலரைக் கண்டு காலத் தாழ்ச்சியின்றி அச்சிட்டு வெளிக்கொணர்வதாக வாக்குறுதி தந்தபடிச் செய்தார். இதுகுறித்த நன்றிப் பெருக்கைச் சிங்காரவேலர் அவ்வகராதி நூல் முகப்பில் பதிப்புரையாகக் கீழ்க்கண்டவாறு எழுதிக்காட்டினார்.

"இதனைச் சென்னையிலிருந்து பிரபுக்கள் சிலரிடம் காட்டினேன். வெளியிடுக என்றனரேயன்றி அச்சிட்டு வெளிக்கொணர ஒன்றும் கூறிற்றிலர். அச்சிடப் பொருளிலாது இதனைச் சஞ்சிகைவாயிலாக ஓர் அறிக்கைப் பத்திரம் வெளியிட்டேன். என் வழிபடுகடவுளாகிய மலைமகள் நாயகர் உளக் குறிப்போ அல்லது நான் வெளிப்படுத்திய அறிக்கையோ மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரசிடெண்டும், பாலவனத்தம் ஜமீன்தார் அவர்களும் தமிழ் வளர்த்த ஸ்ரீமான் பொன்னுசாமி தேவரவர்களின் திருக்குமாரரும் என் தனர்ச்சிக் கண் ஊன்று கோல் போல்வருமான ஸ்ரீமான் பொ.பாண்டித்துரைச்சாமித் தேவரவர்களின் கைப்பட்டுத் தாமே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டு களித்து, அதனைத் தாமே மதுரைக்கு எடுத்துச் சென்று பலரைக்கொண்டு சுத்தமாய் எழுதுவித்து மீண்டும் சென்னையில் என் முன்னிலையில் அச்சிட உத்தரவளித்து அப்போதைக்கப்போது பொருளுதவி செய்து வந்தனர்.

மேற்படியான சிங்கார வேலரின் ஒவ்வொருபதமும் பாண்டித்துரைத் தேவர் உள்ளி உள்ளமெலாம் உவந்தீந்த செயலுக்கான சான்றன்றோ? இக்குறிப்பில் நூலாசிரியரின் ஏக்கத்தைவிடத் தேவருக்கிருந்த அடங்கா ஆசைதான் பெரிதும் போற்றுதலுக்குரியதாய்க் காணப்படுகிறது.

இதை நூலாக வெளியிட்டால் பொருள் வருவாய் வரும் என நினைக்காமல் சேது சீமைக்கே உரிய செந்தமிழ்ப் பற்றால் நூலைக் கொணர்வது தமிழுக்கான தொண்டென நினைத்த பாண்டித்துரைத் தேவரை ஔவைக்கு நெல்லிக் கனி தந்து தமிழைவாழ வைத்த கலிகால அதியமான் எனலாம். அதனால்தான் சிங்காரவேலர் தேவரைப் பாண்டித்துரைத் தேவர் என எழுதாமல் பாண்டித்துரைச் சாமித் தேவர் எனக் கடவுளாகவே சுட்டி எழுதினார். வேலர் எழுதிய ஆங்கில முன்னுரையிலும் **Pandithurai Swami Thevar** என்றே கூறிச் சாமியாகத் தொழுதார். இதனால் நூலை வெளிக்கொணர விரும்பிய நூலாசிரியரின் ஆர்வத்தினும் தேவரின் ஆர்வம் விண்ணினும் விஞ்சியது என்றே கூறலாம். இப்படித் தமிழ் உள்ளளவும் சிங்கார வேலரை வாழ்விக்க வைத்த பாண்டித்துரைத் தேவர் "உள்ளி உவந்தீந்த" வள்ளலன்றோ!

# தமிழ் : செம்மொழிச் செயலாக்கத்திற்குச் செய்ய வேண்டுவன

தி. இராசகோபாலன்,
சென்னை – 73.

பழம்பெரும் நாடாகிய பாரத நாடு, பாரத வீரர் மலிந்த நன்னாடு, தன்னலம் பேணி இழிதொழில் புரிந்ததால், அந்நிய நாட்டாரின் ஆளுகைக்கு உட்பட்டது. ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்ட நாடு, தாழ்வுற்று வறுமை மிஞ்சி, பாழ்பட்டுப் போனது. பண்பாடு, கலை, இலக்கியம், மொழி அனைத்தும் தங்களுடைய முகங்களையும் முகவரிகளையும் இழந்தன. 'குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல், குழியும் பறித்தது போல்' எனும் பழமொழிக்கேற்ப, அடிமைப்படுத்தியது மட்டுமல்லாமல், இந்நாட்டினுடைய மொழிகளையும் இழித்துப் பேசத் தொடங்கினர்.

இந்திய நாட்டு மொழிகளைக் கொச்சைப்படுத்திப் பேச முற்பட்ட லார்டு மெக்காலே, "நல்லதொரு மேலைநாட்டு நூலகத்தின் ஓர் அலமாரி, இந்தியாவிலும் அரேபியாவிலும் உள்ள முழுவதுமான இலக்கியங்களை விட மேம்பட்டதென்ற கருத்தை மறுக்க முடிந்த, மேற்கிந்தியன் ஒருவனைக் கூட இன்றுவரை நான் காணமுடியவில்லை'' என்று எழுதிப் போனான். லார்டு மெக்காலேவின் ஆங்கில மோகம், மண்ணின் மைந்தர்களைத் தட்டி எழுப்பியது. பங்கிம் சந்திர சட்டர்ஜி, பிரேம் சந்த், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் போன்ற பெருமக்கள் வீறுகொண்டு எழுந்து, தத்தம் மொழியினுடைய பெருமை பற்றிப் பேசலானார்கள்.

தமிழகத்தில் மகாகவி பாரதியார், ''சென்ற நூறு வருடங்களாக இந்நாட்டில் இங்கிலீஸ் படிப்பு நடந்து வருகிறது. இங்கிலீஸ் பள்ளிக்கூடங்களுக்குப் போய்த் தேறினவர்களிடம் மனசாட்சிப்படியும், தன்னறிவுப் பயிற்சியின் விசாலத்திற்குத் தகுந்தபடியும் நடக்கும் யோக்கியதை மிக மிகக் குறைவாக இருக்கிறது" என ஆங்கில மோகத்தின் திரையைக் கிழித்ததோடு, 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத் தொழுது படித்திடடி– பாப்பா" எனத் தமிழ் மக்களுக்கு மொழியுணர்வையும் ஊட்டினார்.

நாட்டுமக்களின் நாடித்துடிப்பை உணர்ந்த ஆங்கில அரசு, பள்ளிக்கல்வி வரை மாநில மொழியைப் பயிற்றுமொழியாகத் தர முன்வந்தது. ஆனால், மாநில மொழியை 'வர்னாகுலர் லாங்குவேஜ்'

என அழைத்தது. வர்னாகுலர் என்பதற்கு இலத்தீன் மொழியில், 'அடிமைகளின் மொழி' என்பது பொருள். 1937இல் சென்னை மாநிலத்தின் தலைமையமைச்சராகப் பொறுப்பேற்ற மூதறிஞர் இராசாசி அவர்கள், வர்னாகுலர் மொழி என்பதை, வட்டார மொழி என மாற்றினார்.

இதற்கிடையில் இந்தியாவின் வைசிராயாக வந்த லார்டு கர்சான், கல்லூரிக் கல்வியிலும் அவரவர் தாய்மொழி ஒரு பாடமாக இடம்பெற வேண்டும் என்றார். அப்பொழுது வழக்கம்போல, கவர்னர் ஜெனரலைச் சூழ்ந்திருந்த வடமொழி வாணர்கள், வடமொழியாகிய சமஸ்கிருதம் மட்டும் தான் இந்தியா முழுமையிலுமுள்ள கல்லூரிகளில் பாடமாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். தங்களது பேராசையை மேலும் வலியுறுத்த விரும்பிய வடமொழி விற்பனர்கள், 'இலத்தீன், கிரேக்கத்தைப் போல சமஸ்கிருதம் ஒன்றுதான் இந்தியாவிலுள்ள ஒரே செம்மொழி' எனவும் வாதிட்டனர்.

இந்நிலையில், தமிழகத்திலிருந்த திரு.பரிதிமாற்கலைஞன், திரு.மு.சி.பூரணலிங்கம் பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் (1877இல்) செம்மொழிக்குரிய பதினோரு பண்புகளும் தமிழுக்கிருப்பதை எடுத்துக்காட்டி, மேடைகள் தோறும், பத்திரிகைகள் தோறும் வாதிட்டனர். அவர்களுடைய முயற்சியால், கல்லூரிக் கல்வியில் தமிழுக்கு ஓரிடம் தர முடிந்ததே தவிர, தமிழைச் செம்மொழியாக்க முடியவில்லை.

1918 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற சைவ சித்தாந்த சமாஜ மாநாட்டில், 'தமிழைச் செம்மொழியாக்கச் சென்னைப் பல்கலைக்கழகம் பரிந்துரைக்க வேண்டும்' எனத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. 1919–1920களில், கரந்தைத் தமிழ்ச்சங்கம், 'சென்னைப் பல்கலைக் கழகமும் அரசும் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும்' எனத் தீர்மானம் நிறைவேற்றுகின்றது. பின்னர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர், தேவநேயப் பாவாணர், பேராசிரியர் சி.இலக்குவனார், மாகறல் கார்த்திகேயன் போன்ற பெருமக்கள், தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி என்பதோடு, அதுவே உலகத்து மொழிக்கெல்லாம் தாய்மொழி எனவும் நிறுவி வந்தனர்.

*பொன்மனச் செம்மல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.* மதுரையில் நிகழ்த்திய ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில், ஒரு பேராளர் செம்மொழியைப் பற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். நிகழ்ச்சியின் நிறைவில் முதலமைச்சர் அவர்கள் செம்மொழியைப்

பற்றிய விளக்கங்களைக் கேட்டார். அதே பேராளருக்குப் பின்னர் 'கலைமாமணி' பட்டம் வழங்கப்பட்டது. அதற்கு நன்றி தெரிவித்து மடல் எழுதிய தமிழ்ப் பேரறிஞர், தமிழ் மொழியைச் செம்மொழியாக்க வேண்டியதின் இன்றியமையாமையும் வற்புறுத்தியிருந்தார். முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களும் தமிழைச் செம்மொழி ஆக்குவதற்கு ஒரு வல்லுநர் குழுவை நியமித்தார்.

தொடர்ந்து இன்றைய முதலமைச்சராக இருக்கின்ற செல்வி ஜெயலலிதா அவர்களும் தஞ்சையில் நிகழ்த்திய எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், தமிழைச் செம்மொழியாக அறிவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். அம்மாநாட்டிற்கு வருகை தந்த அப்பொழுதைய தலைமை அமைச்சர் திரு.நரசிம்மராவ் அவர்களும் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க நினைத்திருந்தார். ஆனால், அதே நேரத்தில் டெல்லியில் துரித கதியில் ஏற்பட்ட அரசியல் பிரச்சனைகள் தலைமை அமைச்சரை விரைவாக டெல்லிக்கு அழைத்ததால், செம்மொழி மறக்கப்பட்டது.

அண்மையில் தலைநகர் தமிழ்ச் சங்கம் முனைவர் சாலினி இளந்திரையன் அவர்கள் ஆதரவில், டெல்லி மாநகரில் செம்மொழிக்காக, ஓர் அறப்போராட்டத்தையே நடத்தியது.

இவ்வாறாகக், காலங்கள் தோறும் எடுத்தும் படுத்தும் தொடுத்தும் தமிழ்மக்கள் தொடர்ச்சியாக எழுப்பி வந்த குரலால் 17.09.04 அன்று நடுவண் அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது. காகிதத்தில் வரையப்பட்ட காரணத்தாலேயே, அக்கட்டிடத்தில் குடியேறி விடமுடியாது. அதனை, வரைபடத்தில் காட்டியவாறு, வெளிப்புறத்தில் கட்டத் தொடங்க வேண்டும்.

1. முதலாவதாக, நடுவண் அரசு ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருக்கின்ற சமஸ்கிருதம், பாரசீகம், அரபு மொழிகள் அடங்கிய செம்மொழிப் பட்டியலில் தமிழைச் சேர்க்க வேண்டுமே தவிர, புதிதாக ஒரு பட்டியல் தொடங்கியிருப்பதை நீக்க, நாம் போராட வேண்டும். மேலும், 'தமிழைச் செம்மொழியாக்குகிறேன்' என்று, செம்மொழிக்குரிய இரண்டாயிரம் ஆண்டுகள் எனும் வரையறையை ஆயிரம் ஆண்டுகளாகக் குறைத்திருப்பதை நீக்கவும் நாம் முயல வேண்டும். ஏனென்றால், மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்குத் 'தமிழுக்கு ஆயிரம் ஆண்டு பழமைதான் இருக்கிறது போலும்' என்று எண்ணத் தோன்றும். தேசிங்குராஜன் குதிரையைப் பாராட்ட ஒருவரை அழைத்தால்,

அவர் தம்முடைய வீட்டு லாயத்தில் கட்டியிருக்கும் குதிரைகளையும் கொண்டு வந்து 'சடாக்'கிற்குப் பக்கத்தில் நிறுத்தியது போல், ஆயிரம் ஆண்டு பழமை மட்டுமே உடைய மொழிக்காரர்கள், தங்கள் மொழிகளையும் 'செம்மொழி' வரிசையில் கொண்டு வந்து நிறுத்தக் கூடும். எனவே, ஏற்கனவே முன்னோர்கள் வகுத்த கால வரையறையைத் தளர்த்தக்கூடாது. கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுமொழியாக ஆக்க வேண்டும். தமிழை ஒரு பாடமாகப் படிக்காமலேயே தமிழ்நாட்டில் பட்டம் வாங்கும் அவல நிலையை உடனடியாகப் போக்க வேண்டும்.

2. அடுத்து, மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும், வேளாண்மைக் கல்லூரியிலும் முதலாண்டு மாணவர்களுக்கு ஆங்கிலம் ஒரு பாடமாக இருப்பது போல், தமிழும் ஒரு பாடமாக இருக்கவேண்டும். ஏனென்றால், தமிழ்ச் சமூகத்தோடு தானே அவர்கள் பணியாற்றப் போகிறார்கள். தமிழறிவு பெற்ற மருத்துவர்களும் பொறியியல் வல்லுநர்களும் தாம், இந்த மண்ணின் மைந்தர்களோடு இரண்டறக் கலக்க முடியும்.

3. தமிழ்நாட்டில் தமிழ் தான் ஆட்சிமொழி என்பது, காகிதப் புலியாக இருக்கிறதே தவிர, அது உறுமும் புலியாக மாறவில்லை. சப்பான் நாட்டைப் போன்று, அனைத்து அலுவலகங்களும் ஆங்கில மோகத்திலிருந்து வெளிப்பட்டு, அன்றாட அலுவல் முறைகளைத் தமிழிலேயே நடத்த வேண்டும்.

4. தமிழ்ப்படித்துவிட்டுப் பலர் வேலையில்லாமல் இருக்கின்ற காரணத்தால், தமிழ்ப்படிப்பில் ஓர் அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்ப் படித்தவர்களின் வேலையில்லாமையைப் போக்க, இந்து அறநிலையத்துறை–திருக்கோயில் நிர்வாக அலுவலகம் சார் பதிவாளர் அலுவலகம் (ஸப்–ரிஜிஸ்தாரர் ஆபீஸ்) போன்ற அலுவலகங்களில் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தவர்களைப் பட்டம் வாங்கியவர்களை மட்டுமே வேலைக்கு அமர்த்தினால், வேலையில்லாத் திண்டாட்டமும் தீரும்; தமிழ் படிப்பதில் ஒரு நம்பிக்கையும் ஏற்படும்.

5. அஞ்சல் வழிக் கல்வி நிறுவனங்கள் வணிக நோக்கத்தோடு மட்டும் இயங்குவதால், தமிழில் முதுகலைப் பட்டமும், ஆய்வில் நிறைஞர் பட்டமும், முனைவர் பட்டமும் கூட மலிவுப் பதிப்பாக

ஆகிவிட்டன. ஆர்வமில்லாதவர்கள் – உழைக்க விருப்பம் இல்லாதவர்கள் – தகுதி இல்லாதவர்கள் எல்லாம் எளிதாகப் பட்டங்கள் பெற்றுவிடுகிறார்கள். எனவே, அஞ்சல் வழிக் கல்வி நிறுவனங்கள், தரத்தையும் தகுதியையும் பாதுகாப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

6. தமிழ்நாட்டில் வள்ளுவர் கோட்டம், தேரெழுந்தூரில் கம்பன் மணிமண்டபம், பூம்புகார் சிற்பக்கூடங்கள், அம்பேத்கார் நினைவாலயம் போன்ற இடங்கள், வெறும் காட்சிப் பொருளாகவே இருக்கின்றன. அவற்றை எல்லாம் ஆய்வுக்கூடங்களாக்கி, பல ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வு செய்வதற்கு வழி வகுக்கலாம்.

7. அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் சில, செம்மொழியாகிய தமிழுக்கு இருக்கை ஏற்படுத்த மனம் இருந்தாலும், கையில் பணம் இருக்காது. நம்முடைய மாநில அரசோ, மைய அரசோ தொடக்க நிலையில் நல்கைகள் (மானியங்கள்) வழங்கி ஊக்கப்படுத்தலாம். தமிழ்நாட்டு இளைஞர்கள் சிலர் அயல்நாடுகளில் உதவித் தொகை பெற்று, மேற்படிப்புக்கு அயல்நாடுகளுக்குச் செல்வதுபோல், அயல்நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்குத் தமிழ்படிக்க வரும் வெளிநாட்டவருக்கு, நாம் உதவித் தொகை வழங்கலாம்.

8. உலகப் பொதுநூலாகிய திருக்குறளை உலகத்து மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்த்து, அந்தந்த நாட்டுப் பல்கலைக்கழக நூல்நிலையங்களில் அடுக்கலாம். திருக்குறளை உலகத்தில் இருக்கின்ற அறநூல்களோடு (எத்திகல் லிட்ரஸர்) ஒப்பிட்டு ஆராய்ந்து, அவற்றுள் எல்லாம் திருக்குறள் எவ்வாறு தலைமை தாங்கி நிற்கிறது என்பதை எடுத்துக்காட்டலாம்.

9. தமிழிலே பிறமொழிச் சொற்கள் வந்து கலப்பதைத் தொடக்கத்தில் தடுக்கமுடியாது. உலகமே ஓரினமயமாகும் போது, பிறமொழிச் சொற்கள் நம்மை நோக்கிப் படையெடுப்பதைத் தடுக்க முடியாது. ஆனால் தொல்காப்பியர் காட்டிய வழியில், வடசொற்களையும் திசைச் சொற்களையும் தமிழ் மொழிக்கேற்றவாறு தன்வயப்படுத்த வேண்டும். கடலிலே பிற ஆறுகள் வந்து கலப்பதைக் கடல் எதிர்ப்பதில்லை. ஆனால், முகத்துவாரத்திலிருந்து கடலின் மையத்திற்கு ஆற்றுநீர் செல்லும்பொழுது, ஆற்றுநீர், கடல்நீரின் வண்ணமாக ஆகிவிடும்.

அதுபோல், தமிழை நோக்கி வரும் சொற்களைத் தமிழ் மரபுக்கேற்றவாறு, சொல்லாக்கம் செய்ய வேண்டும். எடுத்துக்காட்டு, செல்பேசி **(Cell Phone)** உயிர்க்கொல்லி (எய்ட்ஸ்) போன்றவற்றைச் சொல்லலாம்.

10. பேரறிஞர் அண்ணா அவர்கள், பிறமொழிக் கலப்பினுடைய தீமையை நன்றாகவே எடுத்துச் சொல்கிறார். "பிறமொழிச் சேர்க்கையும் பிறமுறைகளின் சேர்க்கையும் தமிழ் மொழியை வளர்க்கும் என்று காரணம் காட்டி, இந்தத் தீய செயலைச் செய்து வருகின்றனர். எனினும், புலவர் பெருமக்களின் அறிவுரையைக் கேட்டதால், இந்தக் கலவை தீது பயப்பது என்று தெரிந்து, தமிழ் மொழிக்கு மீண்டும் தனியானதோர் ஏற்றம் தேவை என்ற தூய நோக்குடன் பணியாற்றி வருகிறோம். நானே பல தடவைகளில் பேசியான பிறகும் எழுதியான பிறகும், இன்னின்ன தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருக்கலாமே என்று வருத்தமுறுவது உண்டு" என்றவர் கூறும் கருத்தை மனத்தில் இருத்தி, தனித்தமிழ் நடையை எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் மேற்கொள்ள வேண்டும்.

11. அறிவியல், கணினியியல், மானுடவியல் போன்ற துறைகளில் இன்றைக்குப் புதுப்புது சொற்கள் உருவாக்கப்படுகின்றன. பாவேந்தர் பாடியது போல், ஒருத்தர் தயையில்லாமல், புதுச் சொற்கள் சலசலவெனப் பெருகுதல் வேண்டும். மேற்குறித்த துறைகளில் உருவாகும் சொற்களை, அவற்றின் கனம் அறிந்து தமிழ் மொழியில் கொணர வல்லுநர் குழு ஒன்று உருவாக்க வேண்டும். 'மவுசு' என்ற சொல்லுக்குச் சுட்டி என நல்ல சொல் வந்திருக்கிறதல்லவா.

12. தமிழ்நாட்டில் இன்று படிக்கின்ற பழக்கம் குன்றி வருகிறது. சின்னத்திரையும் திரைப்படங்களையும் பார்க்கும் பழக்கம் தான் மிகுந்து வருகிறது. சின்ன, பெரிய திரைகளில் இடம்பெறும் பேச்சு வழக்கையும் பாடல் வழக்கையும், அப்படியே பின்பற்றுகின்ற முறை உருவாகிவிட்டது. எனவே வானொலியிலும் தொலைக்காட்சியிலும் உச்சரிப்புப் பிழை செய்பவர்களை அப்புறப்படுத்த வேண்டும். பிறமொழிச் சொற்களும், கொச்சைச் சொற்களும் பாடல்களில் இடம் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். மேலும், தமிழ்ப்படங்களுக்குத் தமிழ்ப் பெயர்களே தலைப்பாக அமைய வேண்டும்.

13. திருக்கோயில்களில், 'தமிழிலும் அர்ச்சனை செய்யலாம்' என்றொரு விதியை முன்பிருந்த அரசு வழங்கியிருந்தது. அதனைச் சிறிது மாற்றி, 'தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்யப்படும்' என்று இன்றைய அரசு சட்டம் இயற்ற வேண்டும். 'தமிழில் மட்டுமே அர்ச்சனை' என்ற உணர்வு, அரசிடமிருந்து வருவதை விட, திருக்கோயிலுக்குச் செல்லும் அன்பர்களிடமிருந்து எழுந்தால், பக்தியும் வளரும்; பிற மதத்தவர் மட்டும் பிற மொழிகளில் வழிபடுகிறார்களே என்று இந்துக்கள் கேட்பதால், பிறமதத்தவரும் மொழியால் தமிழர்கள் என்பதால், தமிழ் மொழி வழிபாட்டை மேற்கொள்ளுதல் நலம்.

14. இந்திய நாட்டின் பண்பாட்டு வளர்ச்சிக்கு தமிழ் மொழியினுடைய பங்களிப்பு, இன்னும் வரையப்படாமலேயே இருக்கிறது. இந்திய நாட்டுப் பண்பாட்டு வரலாற்றை இனி எழுதப்புகுவோர், வடக்கிலிருந்து தொடங்காமல், தெற்கிலிருந்து தொடங்க வேண்டும். மேலும், தமிழகத்திற்கும், தென்கிழக்கு ஆகிய நாடுகளுக்குமிடையே நிலவிய பண்பாட்டுத் தொடர்புகளும், முழுமையாக வரையப்படல் வேண்டும். பேராசிரியர் இமறைமலை அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க, செம்மொழி பற்றிய தகவல்களை இணையதளத்தில் தந்த பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள், "இந்தியப் பண்பாட்டுக்கே தமிழ் அடிப்படை" என்று கூறியிருப்பதை, ஆய்வுலகம் முன்னிறுத்திச் செயல்படவேண்டும்.

15. உலகளாவிய பேரகராதிகளிலும், கலைக்களஞ்சியங்களிலும் தமிழ் மொழியைப் பற்றிய செய்திகள் சிற்றெறும்புகள் போல் காணப்படுகின்றன. இக்குறை உடனடியாகக் களையப்பட வேண்டிய ஒன்றாகும். தமிழ்மொழியின் தோற்றம், காலங்கள் தோறும் அதனுடைய வளர்ச்சி, பண்பாட்டு வரலாறு—கலை இலக்கியக்கூறுகள் ஆகியவை, பிறமொழி வல்லுநர்களுக்குப் பயன்படுமாறு மேற்சொன்ன பேரகராதிகளிலும், கலைக்களஞ்சியங்களிலும் இடம் பெறச் செய்தல் வேண்டும்.

16. ஐ.நா. பேரவையில் இயங்கி வரும் யுனெஸ்கோ எனும் ஐக்கிய நாட்டுக் கல்வி நிறுவனம், உயர்தனிச் செம்மொழிகளின் வளர்ச்சிக்கும் பேருதவிகளைச் செய்து வருகின்றது. அத்தகைய உதவிகள் உலகத்தரம் வாய்ந்த செம்மொழியாகிய அன்னைத் தமிழுக்கும் கிடைக்குமாறு முயலுதல் வேண்டும்.

17. தமிழ்மொழிக்கு முன்னைப் பழமைக்குரிய பழமையுண்டு. ஆனால், பின்னைப் புதுமைக்குரிய புதுமை தொடர்ந்து சேர்க்கப்படவில்லை. திருவனந்தபுரத்தில் மீன்வளம், வேளாண்மை, தொழில், வறுமை, நல்வாழ்வு, சத்துணவு, பாலினம், சுற்றுச்சூழல், மக்கள் தொகை ஆகியவற்றில் ஏற்படும் வளர்ச்சி நிலை போன்ற பல்வேறு துறைகள் குறித்து, ஆய்வு நடத்த 'சென்டர் ஃபார் டெவலப்மெண்ட் ஸ்டெடீஸ்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேற்குறித்த துறைகளைக் குறித்துத் தமிழிலும் ஆய்வு நடத்த தமிழ்நாட்டில் அப்படியொன்று நிறுவப்பட வேண்டும்.

18. ஜார்ஜ் எல்.ஹார்ட், கிறித்துப் பிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய தொல்காப்பியம் பத்துப்பாட்டுமே, தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி என்பதற்குப் போதுமான சான்றுகளாகும் என்கிறார். எனவே, அவர் சொன்ன தொல்காப்பியத்தையும் பத்துப்பாட்டையும் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும். இந்த முயற்சியைத் தொடங்குவதற்கு நாட்கள் ஆகும் என்பதால், ஏற்கனவே பேராசிரியர் சி.இலக்குவனார், திரு.மு.சி.பூரணலிங்கம் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், திரு.பி.சா.சுப்பிரமணிய சாஸ்த்திரி போன்ற பெருமக்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி வைத்திருக்கின்ற உரைகளை வெளிக் கொணரலாம்.

19. காலத்தை, ஒரு காலத்தில், கற்காலம், பொற்காலம் என்று அழைத்தது போல், இன்றைய காலத்தைத் 'தகவல் தொடர்பு காலம்' (Information Age) என்கிறார்கள். உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கும்போது கணனியை நாம் மிகுதியும் பயன்படுத்தியாக வேண்டும். கணனி வழி தமிழ் கற்பிக்க, ஏற்கனவே நாம் இணையப் பல்கலைக் கழகத்தைத் (Virtual University) தொடங்கியிருந்தாலும், நிதிப் பற்றாக்குறையால் எதிர்பார்த்தளவுக்குச் செயல்படவில்லை. இணையப் பல்கலைக்கழகம் வலிவோடும் வளமோடும் செயல்பட, தேவையான நிதியாதாரங்களை ஒதுக்கியருள வேண்டும்.

20. பன்மொழிப்புலவராகவும், வடமொழியில் ஆழங்கால் பட்டவருமாகிய ஜார்ஜ் எல்.ஹார்ட், சமஸ்கிருதம் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்பேயே, இங்கு தமிழ்மொழி ஆழமாகவும் அகலமாகவும் வேரூன்றியிருந்தது என்கிறார். ஜார்ஜ்

எல்.ஹார்ட்டினுடைய கோட்பாட்டை உறுதி செய்ய, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும் மைசூரிலுள்ள நடுவண் அரசின் மொழி ஆய்வுக்கூடமும் இதனை ஒரு சவாலாக ஏற்று, ஆய்வுகளை நடத்தல் வேண்டும்.

21. வடமொழியாகிய சமஸ்கிருதம் எந்த மாநிலத்திலும் ஆட்சிமொழியாகவோ, பேச்சுமொழியாகவோ இல்லை என்றாலும், சமஸ்கிருதத்தை இந்தியப் பண்பாட்டின் ஊற்றுக்கண்ணாகக் கருதி, மனிதவள மேம்பாட்டுத்துறை, 'ராஷ்ட்ரிய சமஸ்கிருத சம்ஸ்தான்', 'மஹறிஷி சாந்திபனி வேத வித்யா பிரதிஸ்டானம்' போன்றஅமைப்புகள் உருவாகக் காரணமாக இருந்தது போல், செம்மொழியாகிய் தமிழுக்கும் இரண்டு நிறுவனங்களை உருவாக்க வேண்டும்.

23. ஒன்றன் மூலமாக பாவாணர் தொடங்கிய 'அகரமுதலி' தொய்வின்றி, தொடர்ந்து நடக்க வேண்டும். உலகமொழிகள் அனைத்திற்கும், 'தமிழ்ச் சொல்தான் வேர்ச்சொல்' எனும் உண்மை ஆராயப்பட வேண்டும். இரண்டாவதாகச் சொல்லப்பட்ட நிறுவனத்தின் மூலம், ஜார்ஜ் எல்.ஹார்ட் குறிப்பிட்ட அட்டிக் கிரீக், இலத்தீன், சமஸ்கிருதம், சீனம், அரபிக், பெர்சிக், ஹீப்ரு ஆகிய மொழிகளுக்கிடையேயுள்ள ஒருமைப்பாடுகளையும், இயைபுகளையும் ஆராய வேண்டும். அத்துடன், திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்த திருந்திய மொழிகள் – திருந்தா மொழிகளுக்குத் தமிழ் மூல மொழியாக **(Protto - Dravidian)**வும், அவற்றுக்கெல்லாம் தலைமை தாங்கும் மொழியாகவும் விளங்குமாற்றைஆராய வேண்டும்.

24. தமிழ்மொழி செம்மொழியானதை, மனத்தளவில் ஏற்காத சில வந்தேறிகள், புதிய ஓர் ஆந்தராய் பொடியைத் தூவி வருகின்றனர். 'பழமையும் தொன்மையும் வாய்ந்த ஒரு மொழியிலிருந்து, கிளைமொழிகள் சில தோன்றலாம். ஆனால், காலப்போக்கில் கிளை மொழியாளர்க்கு, மூல மொழி புரியாமல் போகக்கூடும். அவ்வாறு நிகழ்ந்தால், அம்மூலமொழி செத்த மொழியே! எடுத்துக்காட்டு கிரேக்கமும் இலத்தீனும் என டாக்டர் ஐஸாக் ஃப்ங்க், வாக்னல்ஸ் ஆகிய இரு அறிஞர்களும் கூறியிருக்கின்றனர்.

25. டாக்டர் ஐஸாக் ஃப்ங்க், வாக்னல்ஸ் ஆகிய இரு வல்லுநர்களும் வேறு ஒன்றுக்காகக் கூறிய கருத்தை எடுத்து வைத்துக் கொண்ட வந்தேறிகள், "அந்த வகையில், மலையாளிகளுக்கும் கன்னடத்துக்காரர்களுக்கும் தமிழ் ஓர் அந்நியமொழி ஆகிவிட்டதே" என வயிற்றெரிச்சலைக் கொட்டுகின்றனர். பிற்கால மலையாளத்தில் தமிழ்ச் சொற்களுக்கிணையாக, சமஸ்கிருதமும் கலந்திருக்கிறதே தவிர, ஒரு மலையாளி பேசுவதை ஒரு தமிழன் புரிந்துகொள்ள முடியாதா? ஒரு தமிழன் பேசுவது இன்னொரு மலையாளிக்குப் புரியாதா? கமால் அத்தா துர்க் துருக்கிய மொழியில் பிறமொழிச் சொற்களை நீக்கி, தூய்மைப்படுத்தியது போல், மலையாளிகளும் தற்காலத்தில் கலந்த வடமொழிச் சொற்களை நீக்கித் தூய்மைப்படுத்துவார்களேயானால், அப்பொழுது மலையாள மொழி, தமிழின் கிளை மொழி என்பது புலப்படும் அல்லவா?

26. செம்மொழிகளுக்குள்ளேயே தமிழ் ஒன்றுதான் 'பன்னாட்டு மொழி' **(Indian International Language).** இலங்கையிலும், சிங்கப்பூரிலும் தமிழ் சட்டப்பூர்வமாக, ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மலேசியாவில் நாடாளுமன்றமொழியாக ஏற்றுக் கொள்ளப் பெற்றிருக்கிறது. மேலும் 57 நாடுகளில் தமிழ்மொழியைப் பேசுகின்றவர்கள் நீக்கமறநிறைந்திருக்கிறார்கள். தமிழ்மொழி, செம்மொழியானதைத் தாங்க முடியாத வந்தேறிகள், வேறு ஒரு புதுக்கரடியையும் கிளப்பி விட்டிருக்கின்றனர், அதாவது, அரசியல் சட்டம் 8வது பிரிவின் படி நவீன இந்தியமொழி என்பதற்காகக் கிடைத்துவரும் உரிமைகளும் சலுகைகளும், செம்மொழியானால் கிடைக்காதாம். இந்தவாதம் எப்படியிருக்கிறது என்றால், வேலையில்லாப் பட்டதாரிகளுக்காக அரசு வழங்கிவரும் உதவித்தொகை, வேலை கிடைத்தால் போய்விடும். 'அதனால் வேலையில்லாப் பட்டதாரியே! வேலைக்குப் போகாதே' என்று எச்சரிப்பது போலிருக்கின்றது.

வழங்கியிருக்கிறது. அது போன்றதோர் நிதியை நாமும் பெற்று ஒலைச்சுவடிகளை அச்சுக்குக் கொண்டு வரவேண்டும். உலகத் தமிழ் மாநாடுகளை நடத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட பன்னாட்டுத் தமிழ் ஆய்வு மன்றமும் (IATR), மதுரையில் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழ்ச் சங்கமும் சோம்பிக்கிடக்கின்றன. அவற்றைத் தட்டியெழுப்பி, உலகத் தரம் வாய்ந்த மொழி ஆய்வினை நிகழ்த்த வைக்கலாம்

31. நம்முடைய மொழியில் படைப்புக்கலை வளர்கின்றவேகத்திற்குத் திறனாய்வுக்கலை வளரவில்லை. ஒன்றன் படைப்புக்கு ஒரு படைப்பாளி செலவழிக்கின்றநேரத்தைப் போல் பத்து மடங்கு ஒரு திறனாய்வாளன், ஒரு திறனாய்வுக்குச் செலவழிக்க வேண்டும். ஆனால் ஒரு படைப்பாளிக்குக் கிடைக்கின்றசமூக மரியாதையில் திறனாய்வாளனுக்குப் பத்தில் ஒரு பங்கு கூட கிடைப்பதில்லை. எனவே திறனாய்வுக் கலைக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆதரவளிக்க வேண்டும். **P.B.**ஷெல்லி, ஸர் வால்ட்டர் ஸ்காட் போன்றோர்களுடைய வாழ்வையும் வாக்கையும் திறனாய்ந்து, முழுமையான ஆய்வடங்கல்கள் ஆங்கிலத்தில் வந்திருப்பதைப் போல தமிழிலும் கல்கி, புதுமைப்பித்தன், பாவேந்தர் பாரதிதாசன் போன்றோரின் ஆய்வடங்கல்களை வெளிக் கொணரலாம்.

(தொடரும்)


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : **0452-6575615**

RNI Regd. No.: 5508/56 December 2008

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் கதிர் மகாதேவன்

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1.